# செம்மணி

நிலம் 2 துகள் 96 வள்ளுவர் ஆண்டு 2052, 21 வைகாசி 27 வாரமலர், பக்கங்கள் –20,

### போர்க் காலத்தில் நடந்ததைப் போலவே

# பொருளாதார மீட்சிக்கு உலக உதவி பெற இந்தியாவை நாடும் இலங்கை அரசு

### டில்லியில் தேசிய பாதுகாப்பு ஆலோசகருடன் இலங்கை தூதர் சந்தித்து பேச்சு



மிகக் கொடூரமான மனித குலத் திற்கு எதிரான போரை இலங்கை அரச படைகள் தமிழர்கள் மீது நிகழ்த்தியபோது வெளிநாடுகளின் அழுத்தம் போரை நிறுத்திவிடாதபடி இலங்கையைப் பாதுகாப்பதற்கு இந்தியாவின் உதவியை கொழும்பு நாடியதைப் போன்றே, தற்போ தைய பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கையை மீட்பதற்கு பன்னாடுகளின் உதவிகளைப் பெறு வதற்கும் இந்தியாவின் உதவியை நாடியிருக்கிறது இலங்கை.

இந்தியாவிற்கான இலங்கை உயர் ஆணையர் மிலிந்த மொறகொட இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோச கரைச் சந்தித்து நடத்திய பேச்சில் இந்த விடயம் முக்கியமாக ஆராயப் பட்டுள்ளது.

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோ சகர் அஜித்குமார் டோவாலுக்கும் இலங்கை உயர் ஆணையருக்கும் இடையிலான இந்தச் சந்திப்பு வியா ழக்கிழமை (2ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் 9 அமைச்சர்கள் பதவியேற்பு

ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட புதிய அமைச்சர்கள் 9 பேர் வெள்ளிக்கிழமை பதவியேற்றுக்கொண்டனர். அரச தலைவர் கோத்தாபய ராஜபக்ஷ முன்னிலையில் புதிய அமைச்சர்கள் சம்பிரதாயபூர்வமாகப் பதவியேற்ற னர்.

துறைமுகங்கள், கடற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சராக நிமல் சிறிபால டி சில்வா, கல்வி அமைச்சராக சுசில் பிரேமஜயந்த, சுகாதார அமைச்சராக கெஹெ லிய ரம்புக்வெல, நீதி, சிறைச்சாலைகள், அரசியலமைப்பு சீர்திருத்தம் அமைச்சராக விஜேதாஸ ராஜபக்ஸ, சுற்றுலாத்துறை மற்றும் (2ஆம் பக்கம் பார்க்க)



**போர் நாயகர்கள் தினம்:** முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் இனப்படு கொலைக்கு உள்ளானார்கள் என்பதை ஏற்றுக்கொண்டு வைகாசி 18ஆம் நாளை தமிழ் இனப்படு கொலை நாளாக கனேடிய நாடாளுமன்றம் ஏகமனதாக அங்கீகரித்துள்ள வேளையில், இந்த ஆண்டு கொழும்பிலும் முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம் பெற்றன. அரச தலைவருக்கு எதிராக கொழும்பு காலி முகத் திடலில் நடந்துவரும் போராட்டத்தில் இந்த நினை வேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. மறுநாள் 19 இலங்கை போர் நாயகர்கள் தினம் அரச தலை வரின் பங்கேற்புடன் படைஅதிகாரிககளின் ஏற்பாட்டில் போர் நாயகர்கள் நினைவுத் தூபியில் இடம்பெற்றது.

## வரலாற்றில் முதல் தடவையாக கடன் கட்ட தவறிய இலங்கை

பிரிட்டனால் இலங்கை விடுவிக் கப்பட்ட பின்னர் முதல் தடவை யாக அதனால் கடனுக்கான தவ ணைப் பணத்தைத் திருப்பிச் செலுத்த முடியாமல் போயுள்ள தாக அறிவிக்கப்பட்டுள்ளது. சுமார் 78 மில்லியன் டொலர் தவணைப் பணத்தைச் செலுத்துவதற்கான ஒரு மாத கால அவகாசம் முடிந்த பின்னரும் அது செலுத்தப் படவில்லை கடன் தர மதிப்பீட்டு நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

நாடுகள் தமது கடன்களைத் திருப்பிச் செலுத்துவதைக் கண் காணித்து அறிக்கையிடும் உல கின் இரு பெரிய கடன் தர மதிப் பீட்டு நிறுவனங்களும் இலங்கை கடனுக்கான தவணைப் பணத் தைச் செலுத்தத் தவறியுள்ளன என்று அறிவித்துள்ளன. தம்மால் இந்தத் தவணைப் பணத்தை செலுத்தமுடியாது என இலங்கை ஆட்சியாளர்கள் ஏற்கனவே அறி வித்துவிட்டனர் என்கிறபோதும் அது கடந்த புதன்கிழமை தனது தவணைப் பணத்தைச் செலுத்த தவறியிருப்பதை அடுத்து அது தொடர்பான அறிவித்தல் விடுக் கப்பட்டுள்ளது.

ஒரு நாடு தனது கடனுக்கான தவணைப் பணத்தை பகுதியள வாகவோ முழுமையாகவோ திரும் பச் செலுத்தத் தவறினால் அதனை கடன் தவணையைச் செலுத்த முடியாத நிலை என்று அறிவிப் பது வழக்கம். இந்த நிலை அந்த நாடு பன்னாட்டுச் சந்தையில் மேல திக கடன்களைப் பெறுவதை மேலும் கடினமாக்கும்.

இது குறித்துக் கருத்துக்கூறிய இலங்கை மத்திய வங்கி ஆளு நர், தவணைப் பணத்தை கட்ட முடியாது என்பது குறித்து நாம் முன்கூட்டியே அறிவித்துவிட்டோம், கடன் திட்டங்களை மறுகட்டமைப் புச் செய்யும்வரையில் எம்மால் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாது, (2ஆம் பக்கம் பார்க்க)

## சாதாரண தர பரீட்சைக்காக இரவுநேரத்தில் மின்வெட்டில்லை

கல்விப் பொதுத் தராதர சதாரண தரப் பரீட்சை தொடங்கும் நிலை யில் மாணவர்களின் நன்மை கருதி 22ஆம் நாள் ஞாயிற்றுக்கி ழமை முதல் இரவு நேரத்தில் மின் வெட்டு நடைமுறைப்படுத்தப்படாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனி மாதம் முதல் நாள் வரையில் இந்த ஏற்பாடு நடைமுறையில் இருக்கும் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்தது.

இந்த ஆண்டு சாதாரண தரப் பரீட் சைக்கு நாடு முழுவதும் இருந்து 5 லட்சத்துப் 10 ஆயிரம் மாணவர் கள் தோற்றுகின்றனர். இவர்களுக் கான பரீட்சை கடந்த ஆண்டு மார் கழி மாதமே நடந்திருக்கவேண்டும் என்றபோதும் கொரோனா பெருந் தொற்றுக் காரணமாக அது பின்தள் ளப்பட்டு அடுத்த வாரம் தொடங்க வுள்ளது.

மாணவர்களின் கல்வி பாதிக்கப் படாமல் இருப்பதற்கு ஏற்றவகை யில் 10 ஆயிரம் மெட்றிக்தொண் எரிபொருளை மின் உற்பத்திக்கென ஒதுக்கித் தருமாறு ஆட்சியாளர்க ளிடம் கேட்டிருக்கின்றோம் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழு தலைவர் ஞானக்க ரத்னா யக்க தெரிவித்தார்.

பருவ மழை காரணமாக நீர்ப் பிடிப்புப் (2ஆம் பக்கம் பார்க்க)

# சமையல் எரிவாயுவின் 60 சதவீதம் இனிமேல் கொழும்பு, கம்பகாவுக்கே

லிட்றோ காஸ் நிறுவனத்தின் நாளாந்த விநியோ கத்தில் 60 சதவீதம் இனிமேல் கொழும்பு மற்றும் கம்பகா மாவட்டங்களுக்கு வழங்கப்படுவதை உறுதிப் படுத்துமாறு அரச நிறுவனங்களுக்கான பொறுப்புக் கூறல் நாடாளுமன்றக் குழு (கோப்) அறிவுறுத்தி யுள்ளது.

எரிவாயு விநியோகத்தில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறை மற்றும் நெருக்கடிகள் தொடர்பில் லிட்றோ காஸ் நிறுவன அதிகாரிகளை அழைத்து விசாரிக்குமாறு புதிய தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த அறிவுறுத்தலுக்கு அமைய, வெள்ளிக்கி ழமை கோப் குழு லிட்றோ உயரதிகாரிகளை அழைத்துப் பேசியது. இதன்போதே மேற்கண்ட அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

மக்கள் தொகைப் (2ஆம் பக்கம் பார்க்க)

## பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றின் முன் இலங்கையை நிறுத்தவேண்டும் பிரிட்டன்

### அந்நாட்டு எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

இலங்கையில் தமிழர்கள் மீது நிகழ்த் தப்பட்ட போர்க் குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களை பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்து வதற்கு பிரிட்டன் அரசு முயற்சிக்க வேண்டும் என்று அந்த நாட்டு எதிர்க் கட்சித் தலைவர் வலியுறுத்தியுள் ளார். முள்ளிவாய்க்கால் நினை வேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டு பேசிய தொழிற்கட்சி தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான சேர் கீர் ஸ்டாமர், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான அறிக்கையில் குறிப்பி டப்பட்டுள்ள பரிந்துரைகளையும் பிரிட் டன் அரசு உற்றுநோக்கவேண்டும் என்றும் தெரிவித்தார்.

பிரிட்டன் அரசு தமிழர்களுக்கு உறு துணையாக நிற்கவேண்டும். ஐநா மனித உரிமைகள் உயர் ஆணை யரின் பரிந்துரைகள் மீது கவனம் செலுத்தவேண்டும். அத்தோடு இறு திப் போரில் பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் (2ஆம் பக்கம் பார்க்க)

செம்மணி

வாரப் பத்திரிகை

551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்


மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com

தொடர்பு எண்: 0214927781


உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்

ஆசிரியர்: தே.பிரேமானந்த்


# உண்மையல்ல செயலே இப்போது முக்கியம்

நாடு பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிக்கொண்டுள்ள நிலையில்தான் புதிய தலைமை அமைச்சராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுக்கொண்டார். அது இந்த உலகம் முழுவதுமே அறிந்த செய்தி. நாட்டில் எரிபொருள் இல்லை, உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு, மக்களுக்கு வருமானத்திற்கு வழியில்லை என்பனவெல்லாம் ஏற்கனவே மக்கள் அறிந்த செய்திகள்தான். இப்படிப்பட்ட நிலையில் மக்களுக்கு உண்மையைக் கூறுகின்றேன் என்று புதிய தலைமை அமைச்சர் ஆற்றிய உரை ஒரு சதத்திற்குப் பயனற்றது. நாட்டின் உண்மை நிலை பற்றிய எந்தவொரு புதிய தகவலும் அவரது உரையில் இருக்கவில்லை. இன்னும் சொல்லப் போனால் ராஜபக்சக்களையும் அவரது சில சகாக்களையும் தவிர மற்றைய எல்லோரும் கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாகக் கூறிவரும் விடயங்கள்தான் அதில் அடங்கியிருந்தன.

இத்தகைய ஒரு வெள்ளையறிக்கையை கோட்டாபய ராஜபக்ச 6 மாதங்களுக்கு முன்னர் மக்கள் முன்வைத்திருந்தால் ஏற்புடையதாக இருந்திருக்கும். அப்படி ஒரு வெள்ளையறிக்கையை அவர் முன்வைக்கவேண்டும் என்று ஊடகங்கள் வலியுறுத்தி வந்தன. ஆனால் அவர் அதனைச் செய்யவில்லை. இப்போது தலைக்கு மேலே வெள்ளம் சென்றுவிட்ட நிலையில், பொருளாதாரப் பாதிப்பால் மக்கள் முழுவதுமாக ஆட்கொள்ளப்பட்டு அதன் கொடூரத்தை அவர்கள் அனுபவித்துக்கொண்டிருக்கும் நிலையில் ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து பழைய கதைகளை மக்கள் எதிர்பார்க்கவில்லை.

இந்த இக்கட்டு நிலையிலிருந்து இலங்கை மக்களையும் நாட்டையும் காப்பாற்ற அவர் எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன என்பதைத்தான் அவரிடமிருந்து எதிர்பார்க்கிறார்கள். அப்படிப்பட்ட எந்தவொரு திட்டத்தையும் முன்னறிக்கையையும் ரணில் மக்களுக்கு வெளிப்படுத்தாதது நிலமைகளின் முன்னேற்றம் குறித்த அவநம்பிக்கையையே ஏற்படுத்துகின்றது. அடுத்துவரும் மாதங்கள் நிலமை மிக மோசமாக இருக்கும் என்றும் பட்டினியை மக்கள் எதிர்கொள்ளவேண்டியிருக்கும் என்றும் புதிய தலைமை அமைச்சர் கூறியிருக்கிறார். மக்கள் ஏற்கனவே பட்டினியில்தான் வாடிக்கொண்டிருக்கிறார்கள். ஒரு காலத்தில் ஏழைகளின் உணவு என்று சொல்லப்பட்ட பாணும் சம்பலுமே இன்று ஆடம்பர உணவு என்கிற நிலைக்கு வந்துவிட்ட பின்னர் மக்களுக்குப் பட்டினி பற்றிப் பாடம் எடுப்பதில் பயனேதுமில்லை. அதிலிருந்து தப்ப, மக்களை மீட்க என்ன வழி என்பதைத்தான் தலைமை அமைச்சர் சொல்லவேண்டும். அவரது உரையில் அதற்கான தீர்வுகள் எவையும் இல்லை.

செய்கை பண்ணப்படாத நிலங்களில் எல்லாம் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கவேண்டும் அதற்கான திட்டங்கள் அறிவிக்கப்படும் என்று மட்டும் கோடிகாட்டியிருக்கிறார் ரணில். இனிமேல் நிலங்களைத் தயார்ப்படுத்தி விவசாயம் செய்து அதன் பயனை அடைவதற்கு ஆகக் குறைந்தது 3 முதல் 4 மாதங்களாவது தேவை. அதிலும் அரிசி அறுவடையை அடுத்த தை மாதத்திற்கு முன்னதாக எதிர்பார்க்க முடியாது. அப்படியென்றால் அதுவரையில் மக்கள் பட்டினியை எதிர்கொள்வதற்கு என்ன வழி? இதற்கான பதிலைத்தான் ரணில் முன்வைக்கவேண்டும். மக்களைப் பட்டினியில் வாட விடுவதற்கும், நாளாந்தம் எத்தனை பேர் பட்டினியால் இறந்தார்கள் என்று அறிக்கை விடுவதற்கும் ஒரு தலைமை அமைச்சர் தேவையில்லை; உண்மையைக் கூறுகின்றேன் என்று இந்த விவரங்களைச் சொல்லும் ஒருவர் தலைமை அமைச்சராவதற்கான அவசியமும் இல்லை. இந்த நிலைமையில் இருந்து மக்களை மீட்டெடுப்பதற்கான வழி என்ன என்பதைத்தான் அவர் சொல்லவேண்டும்; செய்யவேண்டும்.

# 21ஆவது திருத்தம் திங்களன்று

நிறைவேற்று அதிகார அரச தலைவர் பதவிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் குறைக்கும் வகையில் அரசமைப்பின் 21ஆவது திருத்தத்தைக் கொண்டுவருவதற்கான வரைவு திங்கட்கிழமை அமைச்சரவையின் அனுமதிக்காக முன்மொழி யப்படும் என்று தெரிவித்தார் புதிய நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச.

அமைச்சராகப் பதவியேற்றுக்கொண்டதை அடுத்து உடனடியாக வெள்ளிக்கிழமை மாலையே தனது பொறுப்புக்களை ஏற்றுக்கொண்ட அவர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

21ஆவது திருத்த வரைவு இறுதி செய்யப்பட்டுள்ளது. திங்கட்கிழமை அது அமைச்சரவையில் முன்வைக்கப்படும். அனுமதி கிடைத்ததும் விரைவிலேயே நாடாளுமன்றத்திற்குக் கொண்டுவரப்படும் - என்றார் அவர்.

2015ஆம் ஆண்டு நல்லாட்சி என்ற பெயரில் ரணில் - மைத்திரி கூட்டு ஆட்சி பொறுப்பேற்றதை அடுத்து அரச தலைவரின் அதிகாரங்களைக் குறைப்பதற்கான அரசமைப்புத் திருத்தம் 19ஆவது திருத்தமாக நிறைவேற்றப்பட்டது. ஆனால் 2019இல் கோத்தாபய அரச தலைவராகப் பொறுப்பேற்றதும் 19ஆவது திருத்தம் நீக்கப்பட்டு 20ஆவது திருத்தம் மூலம் குறைக்கப்பட்ட அதிகாரங்கள் அனைத்தும் அரச தலைவருக்கு மீளப்பெறப்பட்டதுடன் மேலதிக அதிகாரங்களும் இணைக்கப்பட்டன.

தற்போது நிறைவேற்று அரச தலைவராக உள்ள கோத்தாபய ராஜபக்ச பதவி விலகவேண்டும் என்று நாட்டுமக்கள் போராடி வரும் நிலையில் 20ஆவது திருத்தம் மூலம் பெறப்பட்ட அதிகாரங்களை நாடாளுமன்றத்திற்குத் திருப்புவதற்கு கோத்தாபய சம்மதித்திருந்தார். இதையடுத்து 21ஆவது திருத்தம் முன்வைக்கப்படவுள்ளது.

இந்தத் திருத்தத்தின் மூலம் இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராவதற்குத் தடை விதிக்கப்படும் என்று அமைச்சர் ராஜபக்ச தெரிவித்தார். அது உண்மையானால் ராஜபக்சக்களில் இளையவரான பசில் ராஜபக்சவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி 21ஆவது திருத்தத்தின் பின்னர் பறிபோகும்.

**மேலும் 9 அமைச்சர்கள்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணி அமைச்சராக ஹரின் பெர்ணான்டோ, பெருந்தோட்டத்துறை அமைச்சராக ரமேஷ் பத்திரண, தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சராக மனுஷ நாணயக்கார, வர்த்தகம், வணிகம், உணவு பாதுகாப்பு அமைச்சராக நளின் பெர்ணான்டோ, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக டிரான் அலஸ் ஆகியோர் பதவியேற்றனர். புதிய தலைமை அமைச்சரராக ரணில் விக்ரமசிங்க பதவியேற்றதை அடுத்து, நான்கு புதிய அமைச்சர்கள் உடனடியாகப் பதவியேற்றிருந்தனர். ஜி.எல்.பீரிஸ், காஞ்சன விஜேசேகர, பிரசன்ன ரணதுங்க மற்றும் தினேஷ் குணவர்தன ஆகியோர் பதவியில் இருக்கும் நிலையில் புதிய அமைச்சர்கள் 9 பேரும் பதவியேற்றுள்ளனர்.

**வரலாற்றில் முதல் தடவையாக...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனை நாங்கள் முன்கூட்டிய தவணை தவறிய நிலை என்று கூறுகின்றோம் - என்றார்.

இலங்கை இதுவரையில் பெற்ற 5 ஆயிரம் கோடி டொலர் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான புதிய வரையறை தேவை என்று எதிர்பார்க்கின்றது. இது தொடர்பாக பன்னாட்டு நாணய நிதியத்துடன் பேச்சுக்களைத் தொடங்கியுள்ளது. நிதியத்திடமிருந்து சுமார் 4 ஆயிரம் கோடி டொலர் வரையிலான புதிய கடனை அது எதிர்பார்க்கின்றது. அதில் ஒரு கடன் திட்டம் தொடர்பான பேச்சுக்கள் அடுத்த வாரம் முடிவடையும் என்று நிதிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதேநேரம் ஜி-7 நாடுகளும் இலங்கைக்கு உதவுவதாக வாக்குறுதியளித்துள்ளன. இந்த உதவிகள் கிடைக்கப்பெற்று நாடு பொருளாதார வழமைக்குத் திரும்புவதற்கிடையில் அடுத்துவரும் சில மாதங்கள் மிக மோசமானதாக இருக்கும் என்று புதிய தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே அறிவித்திருக்கிறார்.

**பொருளாதார மீட்சிக்கு...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதுடில்லியில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின்போது இரு தரப்பு உறவுகளின் நிலை மற்றும் எதிர்காலத்தில் இரு நாடுகளும் ஒருங்கிணைந்தது செயற்படக் கூடிய விடயங்கள் குறித்து ஆராயப்பட்டதாக உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி நிலை தொடர்பில் சந்திப்பில் முக்கியமாக ஆராயப்பட்டுள்ளது. இதுவரையில் இந்தியா வழங்கிய உதவிகளுக்கு மிலிந்த மொறகொட தனது நன்றி களைத் தெரிவித்துக்கொண்டார்.

இலங்கை பொருளாதார நெருக்க டியில் இருந்து மீண்டெழ பன்னாட்டு ஆதரவையும் உதவிகளையும் பெறு வதற்கு இந்தியா உதவவேண்டும் 0என்று சந்திப்பின்போது மிலிந்த மொறகொட கோரிக்கை முன்வைத்தார். இதற்கு இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாதகமாகப் பதிலளித்துள்ளார் என்று தகவல்கள் கூறுகின்றன.

போர்க் காலத்திலும் வெளி அழுத்தங்களில் இருந்து இலங்கையைப் பாதுகாப்பதற்கும், குருதிச் சகதியை வாறி இறைத்த கொடூரமான போரை நிகழ்த்துவதற்கு உலக நாடுகள் எதிர்ப்புக் காட்டாமல் இருப்பதற்குமாக இந்தியாவின் உதவியை நாடியிருந்தது இலங்கை.

இதற்காக இந்தியாவின் அப்போதைய தேசிய பாதுகாப்பு ஆலோசகரை உள்ளடக்கிய மூவர் குழு ஒன்றும் இலங்கையின் பாதுகாப்புச் செயலாளரும் தற்போதைய அரச தலைவருமான கோத்தாபய ராஜபக்சவை உள்ளடக்கிய மூவர் குழுவும் மிக நெருக்கமான உறவுகளையும் தொடர்பாடல்களையும் பேணி வந்தன.

**சமையல் எரிவாயு...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரம்பலுக்கு அமையவும் கொழும்பு, கம்பகா மாவட்டங்களில் மாற்று எரிபொருளுக்கான வாய்ப்புக்கள் இல்லாதமையைக் கருத்தில்கொண்டும் குறைந்தபட்சம் அடுத்த வாரத்திலாவது லிட்றோவின் நாளாந்த விநியோகத்தின் 60 சதவீதத்தை இந்த இரு மாவட்டங்களுக்கும் வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டிருப்பதாக கோப் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சரித்த கேரத் தெரிவித்தார்.

அதேநேரம் நாட்டில் 35 லட்சம் எரிவாயு கொள்கலன் களுக்குப் பற்றாக்குறை நிலவுகையில் 80 ஆயிரம் கொள்கலன்கள் அளவுள்ள இரு கப்பல்கள் மட்டுமே வந்து சேர்ந்திருப்பதாக லிட்றோ நிறுவன அதிகாரிகள் கோப் குழுவிடம் எடுத்து விளக்கினர். வந்திருக்கும் கப்பல்களில் இருந்து எரிபொருளை இறக்குவது மோசமான காலநிலை காரணமாகத் தாமதமாவதாகவும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

நிறுவனத்தின் இருப்பு விவரங்ககளை இணையத் தளம் ஊடாக நாளாந்தம் மக்களுக்குப் பகிரங்கப்படுத்திவருமாறும் லிட்றோ நிறுவனத்திற்கு கோப் குழு அறிவுறுத்தியுள்ளது.

**சாதாரண தர...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிகளிலும் அணைகளிலும் 50 சதவீதத்திற்குத் தண்ணீர் இருப்பதன் காரணமாக பரீட்சைக் காலத்தில் நிலமையைச் சமாளிக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எதிர்வரும் 25ஆம் நாளுக்குப் பின்னர் மேலும் மழை வீழ்ச்சி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால் மின் உற்பத்தி நடவடிக்கைகள் மேலும் மோச மாகாது என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது நாளொன்றுக்கு மூன்று மணி 40 நிமிடங்களுக்கு மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் டொலர் பற்றாக்குறை காரணமாக எரிபொருளை வாங்க முடியாத வங்குரோத்து நிலையை அரசு அடைந்திருப்பதே இதற்கு முக்கிய காரணம்.

**பன்னாட்டு....**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொல்லப்பட்டதற்குக் காரணமாக இருந்தவர்களை பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தின் முன் கொண்டுசெல்லவேண்டும் - என்றார் ஸ்டாமர்.

போர் முடிந்து 13 ஆண்டுகள் கடந்துவிட்டபோதும் இந்தக் கொடூரங்களை நிகழ்த்திய குற்றவாளிகள் இன்னும் நீதியின் முன் நிறுத்தப்படவில்லை. அத்தகைய கொடூர மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட பின்னர் இப்போதும் உயிர் வாழ்பவர்களுக்கும் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும் நீதி கிடைப்பதற்கான தனது அர்ப்பணிப்பை தொழிற்கட்சி இன்று மீண்டும் உறுதிப்படுத்துகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



# முள்ளிவாய்க்கால் கஞ்சி

சத்தியநாதன்

1976இல் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மூலம் தமிழீழம் என்பது சிந்தனையோட்டமாக உருவானது. இலங்கை அரசியலில் தமிழருக்கு பெரும்பான்மைச் சிங்களவர்களிடமிருந்து உரிமைகள் கிடைக்கப்போவதில்லை என்பதை வெளிப்படுத்துவது இந்தத் தீர்மானத்தின் மற்றொரு பரிமாணமாகும். தீர்மானத்தை நிறைவேற்றிய தந்தை செல்வாவிடமோ தளபதி என்று கூறிக்கொண்ட அமிர்தலிங்கத்திடமோ அதை அடைவதற்கான மூலோபாயம் ஏதும் இருக்கவில்லை. 1971இல் இந்திராகாந்தி பங்களாதேசத்தைப் பாகிஸ்தானிலிருந்து பிரித்துக் கொடுத்ததுபோல சிங்கள ஆட்சியாளரிடமிருந்து தமிழீழத்தைப் பிரித்துத் தருவார் என நினைத்தது மட்டும்தான் இவர்களிடமிருந்த நம்பிக்கை. அதன் பின்னரான ஆயுதப்போராட்டத்தில் வடக்குக் கிழக்கு இணைந்த தாயகம் என்ற நிலை நீடித்தது. அதைச் சிங்கள ஆட்சியாளர்கள் இரும்புக் கரம்கொண்டு அடக்கினர். இதனால் கிழக்கு மாகாணம் 2006இல் அவர்களின் வசமானது. 2009மே மாதத்தில் வடக்கின் முழு நிலப்பரப்பும் சிங்கள ஆட்சியாளர்களால் பிடிக்கப்பட்டது. இறுதியாகக் கைப்பற்றப்பட்ட ஊர்தான் முள்ளிவாய்க்கால்.

தமிழீழம் என்ற கோட்பாட்டை இறுதியில் வன்னியில் சிக்கிக்கொண்ட மக்கள் மட்டுமே சுமக்கவேண்டியிருந்தது. இடப்பெயர்வுகள், போராட்டத்தின் பெயரில் பிள்ளைகளைப் பறிகொடுத்தமை, சொத்துக்களை இழந்தமை, உறவுகளை இழந்தமை, குடும்பமாகப் பதுங்குகுழிகளுக்குள் இறந்துபோனமை, உண்பதற்கு வழியற்ற நிர்க்கதி நிலை என எல்லாத் துன்பங்களையும், துயரங்களையும் அனுபவித்தார்கள். புலிகளின் நிர்வாகக் கட்டமைப்புக்களில் ஒன்றான தமிழர் மறுவாழ்வுக் கழகம் (ரி.ஆர்.ஆர்.ஓ) இந்த இறுதிக் கட்டத்தில் முடக்கப்பட்டிருந்த மக்களைப் பட்டினிச் சாவிலிருந்து பாதுகாப்பதற்காகக் கஞ்சி காய்ச்சி வழங்கியது. தமிழர் மறுவாழ்வுக் கழகம் மக்களுக்கான சேவையில் பலவற்றைச் செய்திருந்தபோதும் மக்கள் அழிவுக்கு மத்தியில் உயிர்காப்பதற்காகக் காய்ச்சிய உப்பு இடப்படாத அந்தக் கஞ்சிப்பணி மகத்தானது.

போர் முடிவுற்ற 13 ஆண்டுகளில் தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கிய தமிழ்த் தலைவர்கள் மக்களுக்கு ஆற்றிய பணியைத் தமிழர் மறுவாழ்வுக் கழகத்தின் கஞ்சிப் பணியுடன் ஒப்பிடவே முடியாது. இன்று அந்தக் கஞ்சியே முள்ளிவாய்க்கால் அவலத்தின் உண்மைச் சாட்சியமாக மாறியிருக்கிறு.

இறுதிப்போர் இடர்களை அனுபவித்த அரசியல்வாதிகளில் வடக்கு மாகாணசபை உறுப்பினரான திருமதி அனந்தி சசிதரன், பசுபதிப்பிள்ளை, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கனகரட்ணம் ஆகியோர் அந்தக் கஞ்சிக் கலாசாரத்தைக் கண்ணால் கண்டவர்களாக இருக்க முடியும். தற்போதுள்ள ஏனைய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இறுதிப்போர் பற்றி நாடாளுமன்றிலும் ஊடகங்களிலும் அடித்தும் இடித்தும் ஆணித்



தரமாகவும் குமுறியும் கிடுக்கிப் பிடி பிடித்தும் கதைக்கிற போதிலும் அவர்கள் யாருமே இறுதிப்போரில் அகப்பட்டவர்கள் அல்லர். அதன் துயரம் அந்தக் காலகட்டத்தில் அகப்பட்ட மக்களுக்கு மாத்திரமே புரியும்.

இன்றைய அரசியல்வாதிகளில் பலர் புலிகள் அழிக்கப்படவேண்டும் என நினைத்தவர்கள். அதனால் மக்களைக் காப்

# நுங்குப் பானம்



இந்த வார சமையல்





இப்போது நுங்குப் பருவகாலம். வடக்கின் வரம் என்று பனைகளைச் சொல்வதைப்போல அவை தரும் அமிர்தம்தான் நுங்குகள். இந்தக் கடும் கோடை காலத்தில் உடலுக்குக் குளிர்ச்சியும் புத்துணர்ச்சியும் தரவல்ல இயற்கைப் பானம் நுங்கு. நுங்கிலுள்ள ஊட்டங்கள் ஏராளம். ஆனால் அதைக் கவனிப்பவர்களோ, அது காய்த்துக் குலுங்கும் பருவ காலத்தில் அதை அறுவடை செய்து நுகர்வோரோ அரிதிலும் அரிது. ஒரு சில நுங்குப் பிரியர்கள் மாத்திரம் நுங்கு உண்பதை மகிழ்ச்சியான காரியமாக ஆற்றி வருகின்றனர். கிராமங்களில் அணில் அரித்துக் கீழே விழுகின்ற நுங்குகளைச் சிறுவர்கள், பெரியோர்கள் எனப் பல தரவளிகளுக்கும் பாரபட்சமின்றிச் சுவைக்கப் பழகியிருக்கிறார்கள். ஆனால் நகரவாசிகள் மத்தியில் பனைகள் அரிதாக இருப்பதாலும் நகரவாசிகளின் வாழ்க்கை இதுபோன்ற இயற்கையைப் பெரும்பாலும் நாடாமல் செயற்கைப் பானங்களுள் மூழ்கிக் கிடப்பதாலும் நுங்கு அவர்களுக்கு அருமருந்தாகவே இருக்கிறது. நுங்கே சுவை ஆனாலும் அதற்கு மேலும் சுவையூட்டிப் பருகவும் சிலர் பழக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களின் கண்டுபிடிப்புத்தான் இந்த நுங்குப் பானம். அது குறித்து இந்த முறை பார்ப்போம்.

**தேவையான பொருள்கள்**

நுங்குகள் - 10, சீனி அல்லது கற்கண்டு - 100 கிராம், சர்பத் கலர் மற்றும் வாசனை, ரின் மில்க் 2 மேசைக் கரண்டியளவு, நீர் 2 டம்ளர்.

**எப்படிச் செய்வது?**

நுங்குகளை வெட்டி நீர் மற்றும் தசைகளைத் தனியாக எடுக்கவேண்டும். அதை மின் அரைப் பானில் இட்டு நன்கு அரைத்து அத்துடன் சீனி சேர்த்து அரைக்க வேண்டும். பிறிதொரு பாத்திரத்தில் நீரை எடுத்து அதில் சர்பத் கலர், வாசனை மற்றும் ரின் மில்க் ஆகியவற்றைக் கலந்துகொள்ள வேண்டும். இந்தக் கலவையுடன் நுங்குக் கலவையைக் கலந்து பருகினால் சுவையை உணரலாம். குளிருக்கு ஐஸ் கட்டிகளைச் சேர்த்துப் பருகினாலும் இதமாக இருக்கும்.

## முள்ளிவாய்க்கால் ...

பாற்றுவதற்கான எந்த முயற்சிகளையும் எடுக்கவில்லை. இந்த உப்பில்லாத கஞ்சிக்காலம் எப்போதும் நினைவுகூரப்படவேண்டியது. முள்ளிவாய்க்கால் கஞ்சி ஈழத் தமிழ் மக்கள் பட்ட அவலத்தைப் பிரதிபலிக்கும் ஒரு விழுமியமாக எதிர்காலத்திலும் பேணப்படவேண்டும். இது அரசியல்வாதிகளின் விடயமல்ல. அவலப்பட்ட மக்களின் விடயம்.

இறுதிப்போரில் கஞ்சி காய்ச்சிக் கொடுத்த காட்சியை அப்போது எடுக்கப்பட்ட ஒருசில ஒளிப்படங்கள் உறுதிப்படுத்துகின்றன. இந்தக் கஞ்சியை வாங்குவதற்காக வரிசையில் காத்திருந்த எல்லா வயதினரும் ஆண், பெண் பேதமின்றி வானூர்திக் குண்டுவீச்சுகளாலும், எறிகணைகளாலும் தாக்கப்பட்டுக் கஞ்சிக்காகக் காத்திருந்து வரிசையிலேயே சாவடைந்த சோகமும் நடந்தேறியது. கஞ்சி வழங்கியவர்களும் வாங்கியவர்களும் அதில் சாவடைந்தார்கள். ஆனால், முள்ளிவாய்க்கால் கஞ்சியை வடக்குக் கிழக்குக்கு வெளியே கொண்டுசெல்வது உசிதமானது அல்ல. காலிமுகத்திடலில் தமிழில் தேசிய கீதம் பாடியதற்கு எழுந்த சர்ச்சையைப் போல இந்தக் கஞ்சி விடயத்திலும் ஒவ்வாமைகள் ஏற்பட வாய்ப்புண்டு. புலம்பெயர் தமிழர்கள் மூலம் சிங்களவர் மத்தியில் இவற்றை அறிமுகப்படுத்துவதும் இதன் உண்மையான விளக்கத்தைக் கொச்சைப்படுத்துவதாகவே அமையக்கூடும். காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் இதுவரை ஒரு தலைவரைத் தெரிவுசெய்ய முடியாத நிலையிலேயே உள்ளனர். ஆகையால் அவர்களில் எவரும் தமிழர்கள் விடயத்தில் பொறுப்புக்கூறப் போவதில்லை என்பதைத் தமிழர்கள்தான் புரிந்துகொள்ளவேண்டும். மனித அவலத்தை வியாபாரம் செய்வதைத் தவிர்ப்பதே நல்லது.

முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தில் கஞ்சி வழங்குவதுடன் நின்றுவிடாது ஏழை மக்களுக்கு அரிசியும் தேங்காயும் தானமாக வழங்கும் வழக்கத்தையும் ஏற்படுத்திக்கொள்வது நல்லது. கஞ்சியும் அரிசி தேங்காய்ப் பொதியும் தமிழீழ வரலாற்றின் போர் அவல அடையாளமாக என்றும் நினைவுகூரப்படல் வேண்டும்.





# அரசியல்வாதிகளின் அக்கப்போரில்லாத நினைவேந்தல்

**விதுரன்**

"இந்தமுறை முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்குச் சென்றபோது சென்ற வழி நெடுகிலுமுள்ள படைக் காவலரண்களில் கடமையிலிருந்த சிப்பாய்கள் 'கோ' (போகுமாறு அல்லது செல்லுமாறு) என ஆங்கிலத்தில் எழுதிய பதாகையின் பக்கத்தை மக்களுக்குக் காட்டிக்கொண்டு நின்றனர். அதே மட்டையின் பின்புறத்தில் இருந்த சிவப்பு நிறத்திலான (ஸ்ரொப்) நிறுத்தம் என்கிற பக்கத்தை மக்களுக்குக் காட்டவில்லை. மக்கள் தமது விருப்பப்படி நினைவேந்தல் நிகழ்வை நடத்தினர். புலிகளின் காலத்தில் மாவீரர் தினத்தன்று புலிகளால் வழங்கப்படுவதுபோல தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன. முல்லைத்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தண்ணீர்ப் பந்தலிட்டுத் தாக சாந்தி தீர்த்ததது. முல்லைத்தீவு - புதுக்குடியிருப்புப் பகுதிக் கடைகள் எவையும் திறக்கப்படவில்லை" என்றார் முள்ளிவாய்க்காலுக்குள் அகப்பட்டு 2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் நாளன்று போரின் முடிவோடு, குண்டுச்சத்தங்களின் ஓய்வோடு படையினரின் பகுதிக்குள் சென்ற ஒருவர்.

இதற்கு முன்பு நடைபெற்ற முள்ளிவாய்க்கால் நிகழ்வுகளில் விக்னேஸ்வரன், சம்பந்தன் ஆகிய முதியவர்களும், தமிழ் அரசியல்வாதிகள் பலரும் தாமும் சுடரேற்ற வேண்டும் என மல்லுக்கட்டியிருந்தனர். பல்கலைக்கழக மாணவர்கள் கறுப்பு நிற மேற்சட்டையுன் பாதுகாப்பு வியூகம் அமைத்து நின்றனர். புலிகளின் மூத்தபோராளிகளில் ஒருவரான பசில் காக்கா என்பவர் அரசியல்வாதிகளின் இந்தப் போட்டிகளுக்கு மத்தியில் யாரிடமும் பேசாது இறுதிப் போரில் இறந்துபோன தனது மகளுக்காகக் கண்ணீர்விட்டு அஞ்சலித்தார்.

விக்னேஸ்வரனின் பிள்ளைகளோ, சம்பந்தனின் பிள்ளைகளோ போராடவும் இல்லை மாவீரர்களாகவோ, ஊனமுற்றவர்களாகவோ சிறைப்பிடிக்கப்பட்டவர்களாகவோ, காணாமல் ஆக்கப்பட்டவர்களாகவோ ஆகவும் இல்லை. அவர்களின் பரம்பரையில் உள்ளவர்கள் எவரும் முள்ளிவாய்க்கால் கஞ்சியை வாயிலும் வைத்துப் பார்க்கவில்லை. ஏனெனில் அவர்கள் அந்த இடத்தில் நிற்கவே இல்லை. அத்தோடு இத்தகைய மேட்டுக்குடியினருக்குப் போராட வேண்டிய அவசியமும் இருக்கவில்லை. மேட்டுக்குடியல்லாதவர்களின் போராட்டத்தை எவ்வாறு இந்திய - இலங்கை அரசுகளுடன் சேர்ந்து முடிவுக்குக் கொண்டுவருவது என்பதிலேயே இவர்கள் கவனம் செலுத்தினர். இவ்வாறாகவே இறந்தவர்களை வைத்துப் பல அரசியல்வாதிகள் கடந்த காலங்களில் அரசியல் நடத்தினார்கள். இதையே தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் சுட்டிக்காட்டினார். நினைவேந்தல்களைத் தடுக்கக்கூடாது என அறிவித்தார். சி.வி.கே சிவஞானத்தின் ஆங்கில மொழியிலான கடிதம் கிடைத்த பின்புதான் ரணிக்கு மனமாற்றம் ஏற்பட்டு அவர் அவ்வாறு அறிவித்தார் என்றும் தங்களது நெருக்கடிகளுக்குப் பயந்துதான் ரணில்விக்கிரமசிங்க அத்தகைய முடிவை எடுத்தார் என்றும் தமிழ் அரசியல்புலத்தினர் பீய்த்திக்கொள்வதையும் காணமுடிகிறது. இதைவிடப் புலம்பெயர் தமிழர்களில் பலர் வெடிச்சத்தம் கேட்க முன்பு வெளிநாட்டுக்கு ஓடிய நிலையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பற்றி யும் நினைவேந்தல் பற்றியும் அதிகம் அட்ட காசமாக இருப்பது பாதிக்கப்பட்ட மக்களை பாதிப்பதாக உள்ளது.



போர் முடிந்த கடந்த 12 வருடங்களாகியும் போரால் பாதிக்கப்பட்ட மக்கள் படுகின்ற துயரம் கொஞ்சமல்ல. ரணில் விக்கிரமசிங்கவின் முன்னெடுப்பின் பின்னர் முள்ளிவாய்க்காலில் மட்டுமல்லாது காலி முகத்திடலிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சியும், சுடரேற்றலும், கடலுக்குள் பூத்தூவலும் இடம்பெற்றன.

பிரபாகரனின் பிறந்த தினத்தைக் கொண்டாட விரும்பாத சிங்களவர்கள் அவரது இறந்த தினத்தைக் கொண்டாடுவதில் அதிகம் ஆர்வம் காட்டுவதுண்டு. அவரது இறப்பு சிங்களப் படையினரால் ஏற்படுத்தப்பட்டது என்பதும் சிங்கள இனத்தை அழித்த பயங்கரவாதி கொல்லப்பட்டதாகவுமே நினைக்கின்றனர். பிரபாகரனைக் கொல்வதற்கு எடுத்த அதிக பிரயத்தனத்தில் தமிழ் மக்கள் சிலரும் இறந்தார்கள் என்பதே அவர்களது மனநிலை. இது அவர்களுக்கு வெறும் செய்தி மட்டுமே. இழப்புகளைச் சந்தித்த தமிழ் மக்களுக்கு அது செய்தி அல்ல.

இந்தமுறை மக்கள் அஞ்சலிப்பதைத் தடுக்கக்கூடாது என தலைமை அமைச்சர் அறிவித்ததன் பின்னர் விதண்டாவாத அரசியல்வாதிகளோ தமிழீழமே எமது இறுதி இலக்கு எனக் கூறுபவர்களோ ஒற்றையாட்சித் தத்துவத்தை ஒருபோதும் ஏற்கப்போவதில்லை என்பவர்களோ அஞ்சலிக்கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. இது முழுவதுமாக மக்கள் அஞ்சலியாக மாறியிருக்கிறது. அதனாலேயே அது அர்த்தபுஷ்டியுள்ளதாகவும் அமைந்தது.



# பெரும்பான்மையினரின் அரசியல் கலாசாரம்

வி.அருணாசலம்

2019ஆம் ஆண்டு நடந்த அரச தலைவர் தேர்தல் இலங்கை அரசியல் போக்கில் மிக முக்கியமானது. தமது வாக்குகளால் மாத்திரம் தம்மால் ஆட்சியமைக்க முடியும் என்ற புதிய அரசியல் சித்தாந்தம் ஒன்று சிங்கள மக்கள் மத்தியில் இதன் மூலம் உருவானது. இதில் சிங்கள - பௌத்தம் என்ற நிலை மாறிச் சிங்களக் கிறிஸ்தவர்களும் இணைந்தார்கள். இனத்தைத் தாண்டித் தற்போது பௌத்தமும் கத்தோலிக்கமும் அரசியல் விடயத்தில் ஒரே நிலைப்பாட்டையே எடுத்து வருகின்றன. இந்தப் பேரலைக்குள் தமிழ்க் கத்தோலிக்கர்கள் தவிர்க்கப்பட்டிருக்கின்றனர். இதற்கூடாக, இனி அரசியல் என்பது சிங்கள இனம் சார்ந்த ஒன்றாகவே இருக்க வாய்ப்புண்டு என்கிற எதிர்காலம் உணர்த்தப்பட்டது. இந்த அடித்தளத்தை இட்டவர் கோத்தாபய ராஜபக்ச.

30 வருடப் போர் 2009இல் முடிவுக்கு வந்த பின்னர் பத்துவருடங்கள் கழித்து 2019 ஏப்ரல் மாதத்தில் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் நடந்தது. அதுவரை சிங்களவருக்குத் தமிழர் மீதிருந்த அதிருப்தி முஸ்லிம்கள் மீது திரும்பியது. இலங்கையின் சிறுபான்மை இனங்கள் சிங்களவர்களை இலக்கு வைத்துத் தாக்குகிறார்கள் என்ற அவர்களின் தவறான நிலைப்பாடு அவர்களின் சித்தாந்தத்தை வலுப்படுத்தியது.

தமிழ், முஸ்லிம் தலைவர்கள் தாம் எவ்வாறு நாடாளுமன்றத்துக்குச் செல்வது என்பதில் மட்டுமே குறியாக இருக்கிறார்கள். இதற்காகக் கட்சிக்குள் குத்துவெட்டுகளும், துரோகங்களும் மலிந்து கிடக்கின்றன. கட்சித் தலைமையைக் கேட்காமலே நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனித்தனியாகச் செயற்படும் சூழலும், கட்சிக்குள் சிறு குழுக்களாகப்பிரிந்து செயற்படும் நிலையும் தமிழ், முஸ்லிம்களின் அரசியல் கலாசாரமாக இருக்கிறது. சிங்கள இனம் சித்தாந்த ரீதியில் ஒன்றுபட்டு வரும்போது சிறுபான்மை இனங்கள் மேலும் சிதறிச் செல்கின்றன.

தமிழ்த் தேசியம் பேசுகின்ற தமிழர் மத்தியில் அளவுக்கதிகமான கட்சிகள் உருவாகியுள்ளன. அந்தக் கட்சிகளுக்குள் யாரை ஏமாற்றி நாடாளுமன்றம் செல்வது என்று திட்டமிட்டுச் செயற்படும் நிலை ஓர் அரசியல் கலாசாரமாகமே ஆகியிருக்கிறது. இது தமிழ் வாக்குகளின் ஒன்றிணைந்த பலத்தை முற்றிலுமாக சிதறடிக்கும்போது, கோத்தாபய சிங்கள பௌத்த வாக்குகளின் ஒன்றிணைந்த பலத்தைத் திரட்டினார்.

குறைநிரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள்

இலங்கையின் முக்கிய அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியன தமது தேர்தல் வெற்றிகளுக்குப் பின்னர் பெரும்பான்மையைக் காட்டி அரசை அமைப்பதற்காகத் தமிழ் -முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களை இணைத்து ஆட்சியமைத்த சூழலே சுதந்திரத்துக்குப் பின்பான அரசியலில் காணப்பட்ட அரசியல் பொறிமுறையாக இருந்தது. இதை நினைத்தே 2020 பொதுத் தேர்தலிலும் தமிழ், முஸ்லிம் கட்சிகள் செயற்பட்டன. இதனால் வெறும் கதிரைகளை நிரப்பும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் தூங்கும் பங்காளிகளாகவும் செயற்படவேண்டிய நிலை ஏற்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினரின் கடமை என்ன என்றுகூடத் தமிழ் - முஸ்லிம் உறுப்பினர்கள் பலருக்குத் தெரியாதிருக்கிறது. தமது மக்கள் சார்ந்த விடயங்களைக் கவனிப்பதும் இல்லை.

### சிங்களவரின் அரசியலைத் தமிழர் தீர்மானிக்க முடியாது

தமிழ், முஸ்லிம்கள் விடயத்தில் சிங்களத் தலைவர்கள் தமக்குள் முரண்பட்டாலும் அதிலிருந்து மீண்டு தமக்கான ஓர் அரசியல் பொறிமுறையை உருவாக்கிக் கொள்ளும் வல்லமையைக் கொண்டிருக்கிறார்கள். இலங்கையின் 2 ஆயிரத்து 500 வருட அரசியல் பாரம்பரியத்தில் எப்போதும் சிங்களவரே வென்றிருக்கிறார்கள்.

தற்போது ராஜபக்ச குடும்பத்துக்கு எதிராகக் கிளர்ந்த சிங்கள மக்கள் இறுதியில் தமக்கான ஒரு தலைமைத்துவத்தை உருவாக்கிக் கொள்வார்கள். அந்தத் தலைமையும்கூட தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராக பௌத்த சிங்கள மனோநிலையையே வெளிப்படுத்தவேண்டிய கட்டாயத்தை அவர்கள் ஏற்படுத்துவார்கள். சிங்கள மக்கள் தமது புதிய தலைவரைக் கண்டடைவதில் தமிழ் - முஸ்லிம் மக்களின் பங்களிப்பு இல்லையென்றே கூறமுடியும்.

சிங்களவர் தமக்கான அரசியல் தலைவர்களை உருவாக்குவதிலும் இணைந்து செயற்படுவதிலும் வெற்றி கண்டு வருகிறார்கள். அரச தலைவர் கோத்தாபய ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, சஜித் பிரேமதாச, ரணில் விக்கிரமசிங்க, உதய கம்மன்பில, விமல் வீரவன்ச என அனைவரும் இந்த ஒற்றுமைக்கு அல்லது நெருக்கடிக்குத் தீர்வு கண்டிருக்கின்றனர். இதற்காக அவர்கள் பல்வேறு விட்டுக்கொடுப்புகளைச் செய்வதற்குத் தயாராகவும் உள்ளனர்.


சிங்களவரின் அரசியலைத் தமிழ்த் தலைவர்களால் மாற்ற முடியும் என்றோ திசை திருப்ப முடியும் என்றோ தாங்கள் கிங் மேக்கர்களாக முடியும் என்றே நினைப்பது மிகத்த தவறான அணுகுமுறை. பொருளாதார நெருக்கடியால் ராஜபக்ச அரசு தளம்பிய நிலையில்கூட சிங்களத் தலைவர்கள் தமக்குள் சரணடைந்து தமது மக்களுக்கான சிறந்த தலைமைத்துவத்தை எவ்வாறு ஏற்படுத்துவது என்பதிலேயே கவனம் செலுத்துகிறார்கள். இனிமேலும் அதுவே நடக்கும். சிங்களவர் தமது அரசியல் தீர்மானத்துக்காகத் தமிழரிலோ முஸ்லிம்களிலோ தங்கியிருக்கப் போவதில்லை.

### தமிழ்-முஸ்லிம் தலைவர்கள் புறக்கணிப்பு

பிரதி சபாநாயகர் தெரிவில் இம்தியாஸ் பாக்கீர் மக்காரைப் போட்டியிட வைத்தது, 17.5.22இல் அரச தலைவருக்கு எதிரான அதிருப்தித் தீர்மானத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் முன்வைத்தது ஆகிய இரண்டுமே பெரும்பான்மைச் சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பிடிக்காத விடயம் என்பதைத் தமிழ் - முஸ்லிம் தலைவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். இவ்விரு சந்தர்ப்பங்களிலும் சிங்களவரைக் களமிறக்கியிருந்தால் வாக்கெடுப்பில் எதிர்கொண்ட படுதோல்வியை ஓரளவுக்காகவது தவிர்த்திருக்க முடியும்.

தமிழ், முஸ்லிம் இனங்களின் பிரதிநிதிகள் தாம் நினைத்தபடி செயற்பட முற்பட்டால் அல்லது சிங்களவரின் அரசியலில் தலையிட முனைந்தால் அது பாதகமாக அமையும். இலங்கையில் இனவாதத்தை அதிகம் கையிலெடுத்த கட்சி ஜே.வி.பி. அதன் பிரச்சாரப் பீரங்கியாக இருந்த விமல் வீரவன்சவை மகிந்த தனது போர் வெற்றிக்காகத் தமிழருக்கு எதிராகப் பரப்புரை செய்ய வைத்தார். தற்போது மகிந்தவின் கூட்டைவிட்டு ஜே.வி.பி. வெளியேறி இருந்தாலும் இனவாத அரசியலைக் கைவிட்டதாகக் கூற முடியாது. இவ்வாறான சூழலில் தமிழருக்கு அரசியல் தீர்வு ஒன்றை வழங்கவேண்டும் என்றோ, போர்க்குற்றத்தைச் செய்த படையினரைத் தண்டிக்கவேண்டும் என்றோ காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்குத் தீர்வு வழங்கவேண்டும் என்றோ தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்றோ யாராவது சிங்களத் தலைவர்கள் சிங்கள மக்கள் மத்தியில் கூறினால் அவர்களால் தேர்தலில் வெற்றி பெற முடியாது. அதனால் தமிழ்த் தலைவர்களோ, மக்களோ விரும்புகின்ற இவற்றைச் சிங்களத் தலைவர்கள் செய்யப்போவதில்லை என்பதே தெளிவு.

சிங்கள அரசியல்வாதிகள் நினைப்பதுபோல தனிச்சிங்கள வாக்குகளால் அரசமைப்பதை எதிர்த்து முஸ்லிம்கள், தமிழர்கள் எதுவும் செய்ய முடியாது. அவ்வாறு மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்றால் அது அட்சரகணிதப் பிழையாகவோ அல்லது சிங்களவருக்கு மூளைப் பிசகு ஏதாவது ஏற்பட்ட நிலையாகவோதான் இருக்க முடியும்.



கணேசன்

# காரணம் குறிப்பிடமுடியாத தசை வலி நோய்!

வாழ்நாளில் வலியை உணராத மனிதரைப் பார்ப்பது அரிது. மனிதர்கள் நாளாந்தம் உடல் வலி, தலை வலி, பல் வலி, கை வலி, கால் வலி, முதுகு வலி, முழங்கால் வலி, மூட்டு வலி என ஏதேனும் ஒரு வலியால் வேதனைப்படுவதைப் பார்க்கிறோம். இவற்றுக்கெல்லாம் காரணம் கண்டுபிடிக்க முடியும். அதற்கேற்ப சிகிச்சையும் தர முடியும். ஆனால், இன்ன காரணம் என்று குறிப்பிட்டுக் கூற முடியாத தசை வலி ஒன்று உண்டு. 'ஃபைப்ரோமயால்ஜியா' (FIBROMYALGIA) என்று அதற்குப் பெயர். முன்பெல்லாம் முதியவர்களுக்கு மட்டுமே ஏற்பட்ட இந்த நோய் இப்போது இளம்வயதினருக்கும் ஏற்படுகிறது. இது பற்றிய விழிப்புணர்வு இருந்தால் மட்டுமே இதைக் குணப்படுத்த முடியும்; தடுக்க முடியும்.

**ஃபைப்ரோமயால்ஜியா என்றால் என்ன?**

பரவலான உடல் வலியைக் குறிக்கும் மருத்துவ வார்த்தை இது. ஆண்களைவிட பெண்களை அதிகம் பாதிக்கிற நோய் இது. குறிப்பாகச் சொன்னால் 25 வயதிலிருந்து 60 வயதுக்கு உட்பட்ட பெண்களைத்தான் இது பெரும்பாலும் பாதிக்கிறது. உடல் வலியோடு உடல் களைப்பு, உறக்கமின்மை, ஞாபக மறதி போன்றவையும் தொல்லை கொடுக்கும். முதுகு வலி, இடுப்பு வலி, தலை வலி மட்டுமல்லாமல் உடலின் பல இடங்களில் வலி ஏற்படும். கை, கால் குடைச்சல் அதிகம் தொல்லை கொடுக்கும்.

ஒரே நேரத்தில் உடலின் இரண்டு பக்கமும் வலி ஏற்படுவது இதன் சிறப்பு. உதாரணமாக, இடது கை வலித்தால் அதேவேளையில் வலது கையும் வலிக்கும். வீட்டிலோ, அலுவலகத்திலோ, அன்றாடப் பணிகளைச் செய்யவிடாது. உற்சாகத்தைக் குறைக்கும். மனத்தளர்ச்சியை ஏற்படுத்தும். உலக அளவில் கோடிக்கணக்கான பெண்கள் இந்த நோயால் அவதிப்படுகிறார்கள் என்றால், இந்த நோயின் கொடுமையைப் புரிந்துகொள்ளுங்கள்.

**காரணம் என்ன?**

இதற்கு இதுதான் காரணம் என்று எதையும் குறிப்பிட்டுச் சொல்லமுடியாது. ஒவ்வொருவருக்கும் ஒரு காரணம் இருக்கும். சமயங்களில் பல காரணங்கள் ஒன்று சேர்ந்துகொள்ளும். என்றாலும், மருத்துவ ஆராய்ச்சியாளர்களின் முடிவுப்படி சிலவற்றை இங்குக் குறிப்பிடலாம்.

ஹார்மோன்களின் சமச்சீர்த்தன்மை பாதிக்கப்படுவதுதான் இந்த நோய் வர முக்கியக் காரணம். நமக்கு உடலில் வலி ஏற்படும்போது 'செரட்டோனின்' ஹார்மோன் சுரக்கும். நாம் வலியால் பாதிக்கப்படாத அளவுக்கு அந்த வலியை இது கட்டுப்படுத்தும். ஃபைப்ரோமயால்ஜியா ஏற்படுபவர்களுக்கு இந்த ஹார்மோன் சுரப்பு குறைந்துவிடும். அல்லது முற்றிலும் சுரக்காமல் போய்விடும். இதனால் லேசான வலியைக்கூட இவர்களால் தாங்க முடியாது.

அடுத்து, சிலருக்கு நரம்பு மண்டலத்தில் வலியை உணரச்செய்கிற வேதிப்பொருட்களின் அளவு அதிகரித்துவிடும். அப்போது அவர்களுக்கு ஃபைப்ரோமயால்ஜியா வரும். அடிக்கடி உடல்நலக்குறைவு ஏற்படுபவர்களுக்கும் நீண்ட காலம் மன அழுத்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இது ஏற்படுவதை அனுபவத்தில் காண்கிறோம். குடும்பத்தில் திடீரென ஏற்படும் அதிர்ச்சிகள், இழப்புகள், விபத்துகள், சோக நிகழ்வுகள் இந்த வலியைத் தூண்டுகின்றன என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இது ஒரு பரம்பரை நோயாகவும் வருகிறது. புகைபிடிப்போர், உடல் பருமன் உள்ளவர்கள், உடற்பயிற்சி இல்லாதவர்கள், அறுவை சிகிச்சை மேற்கொண்டவர்கள், வேறு ஏதேனும் மன நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த நோய் விரைவிலேயே வந்துவிடுகிறது. சரியான துக்கமின்மையும் அதீத குளிரும் இந்த வலியை அதிகப்படுத்தும்.

**வலி வரும் இடங்கள்**

இந்த வலியானது உடலில் குறிப்பிட்ட இடங்களில் தொடங்கி, சிறிது சிறிதாக அதிகரித்து, பிறகு பிற இடங்களுக்குப் பரவும். இந்த இடங்களை அழுத்தினால் வலியை உணர முடியும். அந்த இடங்கள் இவை:

தலையின் பின்பகுதி, கழுத்தின் மேற்பகுதி, தோள்பட்டை, நடு நெஞ்சின் மேற்பகுதி, முழங்கை, இடுப்பு, உட்காரும் இடம், முழங்காலின் பின்பகுதி.

மேற்கண்ட இடங்களில் உள்ள தசைகளை இயக்கும்போது வலியோடு, தசை இறுக்கமாக இருப்பதையும் உணரமுடியும்.

**கவலை தரும் களைப்பு**

இந்த நோய் உள்ளவர்கள் எளிதில் களைப்படைந்துவிடுவார்கள். முக்கியமாக காலையில் கண் விழிப்பது சிரமமாக இருக்கும். இன்னும் உறங்க வேண்டும்போல் இருக்கும். உடலில் சக்தி இல்லாததுபோல் உணர்வார்கள்.

**பரிசோதனை என்ன?**

இந்த நோய்க்கென தனியாக எந்தப் பரிசோதனையும் இல்லை. நோயின் தன்மையைப் பொறுத்து மருத்துவர்தான் தீர்மானிக்க முடியும். ஒருவருக்கு ஃபைப்ரோமயால்ஜியா இருக்கிறது என்று உறுதி செய்வதற்கு முன்பு உடலின் பொது ஆரோக்கியம் எப்படி உள்ளது என்பதை அறிந்துகொள்ள பொதுவான குருதிப் பரிசோதனைகள் தேவைப்படும். அடுத்து, எலும்பு மூட்டு சார்ந்த நோய்கள் இல்லை என்பதை சில ரத்தப் பரிசோதனைகளை மேற்கொண்டு உறுதி செய்துகொள்ள வேண்டும். தைராய்டு பரிசோதனைகளும் ஓரளவுக்கு நோயைக் கணிக்க உதவும்.

**சிகிச்சை என்ன?**

இந்த நோய்க்கு முதலில் குடும்ப மருத்துவரைப் பார்க்க வேண்டும். அவரது ஆலோசனைப்படி நரம்பு நோய் நிபுணர், மனநல நிபுணர், எலும்பு நோய் நிபுணர் ஆகியோரையும் கலந்தாலோசிக்கவேண்டும். வலியைக் குறைக்க மருந்து, மாத்திரை மட்டும் போதாது. மன அழுத்தம், உறக்கமின்மை, போன்றவற்றுக்கு மாத்திரைகளோடு மனநலத்துக்கு ஆலோசனைகள் (COGNITIVE BEHAVIOURAL THERAPY-CBT) தேவைப்படும்.

செரட்டோனின் ஹார்மோன் உற்பத்தியை அதிகரிக்க மாத்திரைகள் தரப்படும். இப்போது பெருநகரங்களில் வலி மருத்துவத்துக்கெனத் தனிப் பிரிவுகள் (PAIN MANAGEMENT CLINICS) தொடங்கப்பட்டுள்ளன. இவற்றிலும் ஆலோசனை பெறலாம். இவற்றோடு சில உடற்பயிற்சிகளைச் செய்ய வேண்டியதும் வரும். தியானம், யோகா போன்றவையும் உதவும். அக்குபங்க்சர் மற்றும் ஆயுர்வேத மசாஜ் நல்ல பயனைத் தருகிறது.

**தடுப்பது எப்படி?**

மன அழுத்தம் குறைக்கின்ற வாழ்க்கை முறைகளைக் கடைப்பிடியுங்கள். வாரம் ஒரு நாளாவது குடும்பத்துடன் நேரத்தைச் செலவழியுங்கள். பகலில் உறங்குவதைத் தவிர்த்து, இரவில் சீக்கிரமே உறங்கப் பழகுங்கள். இரவில் தொலைக்காட்சி, கைப்பேசி போன்றவற்றை நீண்ட நேரம் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். நடைப்பயிற்சி மட்டுமில்லாமல் உடற்பயிற்சி செய்வதையும் தினசரி வழக்க மாக்கிக்கொள்ளுங்கள். உடல் எடையைக் கட்டுக்குள் வைத்திருங்கள். கோப்பி அதிகமாகக் குடிக்க வேண்டாம். மது, புகை ஆகவே ஆகாது. பழச்சாறுகள் அருந்துவதை அதிகப்படுத்துங்கள். காய்கறி, பழங்கள் போன்ற நல்ல ஊட்டச்சத்துள்ள உணவுகளை உண்டு உடலின் பொது ஆரோக்கியத்தைக் காத்துக் கொள்ளுங்கள். ஓய்வு நேரங்களில் புத்தகம் படிப்பது, இசை கேட்பது, தோட்ட வேலை பார்ப்பது என உங்களுக்குப் பிடித்த வேலைகளைச் செய்வது என்று வாழும் ஒவ்வொரு

வாரம் ஒரு நாளாவது குடும்பத்துடன் நேரத்தைச் செலவழியுங்கள். பகலில் உறங்குவதைத் தவிர்த்து, இரவில் சீக்கிரமே உறங்கப் பழகுங்கள். இரவில் தொலைக்காட்சி, கைப்பேசி போன்றவற்றை நீண்ட நேரம் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். நடைப்பயிற்சி மட்டுமில்லாமல் உடற்பயிற்சி செய்வதையும் தினசரி வழக்க மாக்கிக்கொள்ளுங்கள்.

## காரணம் ...

நாளையும் ரசித்து வாழப் பழகிக்கொள்ளுங்கள்.

**தசைப்பிடிப்புக்கு என்ன செய்வது?**

தசை வலி, தசை இறுக்கம் இந்த இரு அறிகுறிகளும் ஃபைப்ரோமயால்ஜியாவிலும் காணப்படும். தசைப்பிடிப்பிலும் (MUSCLE CRAMPS) காணப்படும். எனவே, ஒரு சிலர் இந்த இரண்டுக்கும் வித்தியாசம் காண இயலாமல் குழப்பிக்கொள்வார்கள். இரண்டுமே வெவ்வேறு நோய்கள்.

தசைப்பிடிப்பு என்பது ஒரு தசையின் இயல்பான இயக்கத்துக்குத் தடை போடும் தன்மை. இது பெரும்பாலும் கெண்டைக்கால் தசையில் ஏற்படுகிறது. சில நிமிடங்கள் முதல் சில நாட்கள் வரை நீடிக்கலாம். வலி மிகவும் கடுமையாக இருக்கும். ஒரே இடத்தில்தான் இந்த வலி இருக்கும் மற்ற பகுதிகளுக்கு இது பரவாது. ஆண்களில் விளையாட்டு வீரர்களுக்கு இது ஏற்படுகிற வாய்ப்பு அதிகம். சரியான சிகிச்சையை எடுத்துக் கொண்டால், சில நாட்களில் இது குணமாகிவிடும்.

**தீர்வுகள் என்ன?**

தினமும் போதிய அளவு தண்ணீர் குடிக்க வேண்டும். சாதாரண நாட்களில் தினமும் 2 லிட்டருக்குக் குறையாமலும், கோடையில் 3 லிட்டருக்குக் குறையாமலும் தண்ணீர் பருக வேண்டும்.

தசைப்பிடிப்பு உள்ளபோது எலுமிச்சை, ஆரஞ்சு, நன்னாரி பழச்சாறு போன்றவற்றைக் குடிக்க வேண்டும்.

நீர்ச்சத்து நிறைந்த வெள்ளரி, தர்ப்பூசணி போன்றவற்றை அன்றாட உணவில் சேர்த்துக் கொள்ளவும்.

முளைகட்டிய பயறுகள் சாப்பிடுவது தசைப்பிடிப்புக்கான வாய்ப்பைக் குறைக்கும்.

கால்சியம் மிகுந்த பால் மற்றும் பால் பொருட்கள், கேழ்வரகு, பாசிப்பயறு, வெந்தயக் கீரை போன்றவற்றை உணவில் சேர்த்துக்கொள்வது நல்லது.

அதிக வெயிலில் அலையக் கூடாது.

எந்த ஒரு உடற்பயிற்சிக்கும் 'வார்ம் அப்' பயிற்சி மிகவும் அவசியம்.

வெயிலில் உடற்பயிற்சிகள் செய்வதைத் தவிர்க்கவும்.

தசைப்பிடிப்பு உள்ள தசைகளில் இளஞ்சூடான வெந்நீர் கொண்டு ஒத்தடம் தரலாம்.

வலியைப் போக்கும் களிம்புகளைத் தடவலாம்.

தசைக்கு இளக்கம் தருகின்ற களிம்புகளையும் தடவலாம்.

மருத்துவரின் யோசனைப்படி வலியைக் குறைக்க ஊசிகள் போட்டுக்கொள்ளலாம். வலி நிவாரணி மாத்திரைகள் மற்றும் தசை இளக்க மாத்திரைகள் சாப்பிடலாம்.

தசைப்பிடிப்புள்ள இடத்தில் மென்மையான மசாஜ் செய்யலாம்.

பாத நுனி விரல்களிலும் பின்னங்கால்களிலும் மாறி மாறி நிற்கும் பயிற்சிகளைச் செய்யலாம். இதைத் தினமும் 10 முறை செய்யலாம்.

# புலிகளின் நீர்மூழ்கிக் கப்பலை அழித்தோம்

**கமலநாதன்**

ஹேமந்த குமார. இவர் இலங்கை வான் படையைச் சேர்ந்த புலனாய்வுத் துறைப் பணிப்பாளராகக் கடமையாற்றியவர். 1998 தை மாதத்தில் வான் படையில் சேர்ந்த இவர் லேசர்த் தொழில்நுட்பத்தின் மூலம் புலிகளின் இலக்குகளை தாக்கும் பணியில் இருந்தவர். 2019 புரட்டாதி மாதத்தில் பணியிலிருந்து ஓய்வுபெற்றார். தனது அனுபவங்களை அவர் வென யூரியூப் தளத்தில் பகர்ந்தார். அதன் ஒரு பகுதி கடந்த வாரம் செம்மண் பத்திரிகையில் வெளியாகி இருந்தது. அதன் மிகுதிப் பகுதி இந்த வாரம் வெளியாகின்றது.

இறுதிப் போர்க் காலத்தில் நந்திக்கடலின் தெற்குப் பகுதியில் 3 அடி அகலமும் 6 அடி நீளமும் கொண்ட ஒரு பொருள் தண்ணீரில் மிதப்பதைக் கண்டேன். அது என்னவாக இருக்கும் என்பதைக் கமராக்களின் ஊடாகத் தெளிவாக அறிய முடியவில்லை. எனினும் அது ஏதோவொரு முக்கியமான பொருளாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைத்து அதன் மீது கிபிர்த் தாக்குதல் மேற்கொண்டோம். அதன் பின்னர்தான் தண்ணீரின் மேற்பரப்பில் தெரிந்த அது அங்கு மறைக்கப்பட்டிருந்த சிறிய நீர்மூழ்கிக் கப்பல் என்பதை அறிந்தோம். அதை அழித்ததன் மூலம் புலிகளின் தலைவர் பிரபாகரன் அங்கிருந்து தப்பிச் செல்வதற்கு இருந்த இறுதி வாய்ப்பும் இல்லாது செய்யப்பட்டது.

படையினர் வீசும் எறிகணைகள் எதிர்பார்க்கும் இலக்கில் விழாது குறிதவறிப்போகும். எம்மிடம் இருந்த அதி நவீன லேசர் கண்காணிப்பின் மூலம் அவற்றை அவதானித்து உரிய இலக்கைத் தாக்குவதற்கு எத்தனை மீற்றரை அதிகரிக்க வேண்டும் அல்லது குறைக்க வேண்டும், எந்தத் திசைக்கு மாற்ற வேண்டும் என்பவற்றைப் படையினருக்குச் சொல்லி வழிப்படுத்துவோம். தரையில் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் படையினருக்கு இது உதவியாக இருந்தது. இவற்றைவிடப் புலிகள் ஒன்றுகூடி உணவு உட்கொள்ளும் இடங்கள், பயிற்சிபெறும் இடங்கள், முக்கிய தலைவர்கள் வந்துபோகும் இடங்கள் ஆகியவற்றைத் தரையில் செயற்படும் வேவு அணியினர் அவதானித்து அதை உறுதிப்படுத்துவதற்காக எமக்கு அறிவிப்பார்கள். அதி நவீன தொழில்நுட்பத்துடன் அவற்றை நாம் பார்க்கும்போது அவர்கள் வேவு பார்த்த விடயங்கள் பெரும்பாலும் சரியாகவே இருக்கும்.



**அது ஏதோவொரு முக்கியமான பொருளாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைத்து அதன் மீது கிபிர்த் தாக்குதல் மேற்கொண்டோம். அதன் பின்னர்தான் தண்ணீரின் மேற்பரப்பில் தெரிந்த அது அங்கு மறைக்கப்பட்டிருந்த சிறிய நீர்மூழ்கிக் கப்பல் என்பதை அறிந்தோம்**

**வவுனியா வான்படை முகாம் தாக்குதல்**


2009ஆம் ஆண்டு வவுனியா வான்படை முகாம் மீது புலிகள் கரும்புலித் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டார்கள். இந்தத் தாக்குதலுக்கு 8 கரும்புலிகள் பயன்படுத்தப்பட்டனர். அவர்களில் நால்வர் பெண்கள். இந்தத் தாக்குதலைப் புலிகள் நடத்தியதற்குக் காரணம் இருந்தது. இலங்கைப் படையினருக்கு இந்தியா வழங்கியிருந்த அதி நவீன ராடர் கருவியை அழிப்பதே அவர்களின் நோக்கம். அதேவேளை புலிகளின் வானூர்திகளும் இரண்டு குண்டுகளை அந்த முகாமுக்குள் வீசின. நாம் மூவர் அங்கிருந்த பதுங்கு குழிகளுக்குள் இருந்து உயிர் தப்பினோம். நாம் இரவில் தங்குமிடங்களில் இவ்வாறான தாக்குதல்களை எதிர்கொள்ளக்கூடிய பதுங்குகுழிகளும் இருந்தன.

போர் முடிவுற்ற நாளான 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதியன்று எனக்கு வான் படைத் தலைமையகத்துக்கு மாற்றம் கிடைத்தது. அதன் பின்னர் எமது இந்த லேசர் கண்காணிப்பு நடவடிக்கைகளை நாட்டின் சட்டவிரோத செயற்பாடுகளைக் கண்காணிப்பதன் பொருட்டு மேற்கொண்டோம். வீரவில பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்த கஞ்சா உற்பத்தி மையங்களை இதன்மூலம் அவதானித்து அழித்தோம். கடற்பரப்பில் நடக்கும் சட்டவிரோத நடவடிக்கைகளையும் இந்தத் தொழில்நுட்பத்தின் ஊடாக இலகுவாகக் கண்காணிக்க முடியும்.

2019ஆம் ஆண்டு புரட்டாதி மாதத்தில் நான் ஓய்வுபெற்றேன். எனினும் அவசரத் தேவைகள் ஏற்படுமிடத்து எனது அனுபவங்களையும் பயிற்சியையும் எனது நாட்டுக்காக எப்பொழுதும் செய்வதற்குத் தயாராகவே இருக்கிறேன்.

# சிறைக்குள்...

57



தர்மராசா

## உணவு விடயத்தில் கழிவு என்று எதுவுமில்லை

சிறையில் பகலில் கைதிகளுக்கு வழங்கப்படுகின்ற அவித்த கறி மீனைத் தனியாக எடுத்துக் கொஞ்சம் எண்ணெய் ஊற்றி அதைப் பொரித்த பின் கூட்டுக் கறியை அதனுடன் கலந்தால் மிகவும் சுவையாக இருக்கும். கறியுடன் தரப்படும் மீன் துண்டுகளை மிகச் சிறு துண்டுகளாக்கி வெயிலில் காய வைத்து மாசித் துண்டுபோலாக்குவார்கள். சாப்பாட்டு விடயத்தில் சிறைக்குள் கழித்து வைப்பது அல்லது ஒதுக்கப்படுவது என்று எதுவுமில்லை. தினமும் புதிய புதிய உணவு வகைககளைக் கைதிகள் கண்டுபிடிப்பர். மாலையில் வாங்கும் சோற்றைக் கொஞ்சம் கூடுதலாக வாங்கி (சோறு அளவாகத் தரப்படும்போதும் அந்த அளவுக்கும் குறைவாகவே பலர் வாங்குவர்) இரவுச் சாப்பாட்டுக்குப் பின் அதற்கு நீர் ஊற்றி வைப்பார்கள். மறுநாள் காலையில் (பூசாச் சிறையில்) தேங்காய்ப் பூவை வாங்கி (வயிற்றுப்புண் உள்ளவர்களுக்குச் சம்பல் வழங்காது தேங்காய்ப்பூ வழங்குவார்கள்) அதைப் பிழிந்து பாலெடுத்துச் சீனி, பிஸ்கட், மாம்பழம், பேரீச்சம்பழம், வாழைப்பழம் என ஏதாவது கிடைத்தால் அதைக் கலந்து கரையல் செய்வார்கள் (பழங்கஞ்சிபோல). இந்ததக் கரையல் மிகவும் சுவையாக இருக்கும். எந்தச் சாப்பாட்டுடன் எதைச் சேர்ப்பது என்பதில் சிறைக்குள் வரையறைகள் கிடையாது.

காலையில் கரையல்சோற்றைக் குடித்தால் காலை உணவாக வழங்கப்படும் பணைச் சிறு துண்டுகளாகப் பிய்த்து வெயிலில் காய வைத்து றஸ்க் போலாக்குவார்கள். அதைப் பின்னர் இடித்துத் தூளாக்கி வைத்துக்கொள்வார்கள். தேவைப்படும்போது அலுமினியத் தகடு ஒன்றை அடுப்பில் வைத்து அந்த றஸ்க் தூளை வறுத்தெடுத்துத் தேங்காய்ப்பூவும் சீனியும் கலந்து குழைத்துச் சாப்பிடுவார்கள். இந்த மாவை நன்றாகக் காய வைத்து எடுத்தால் மாதக் கணக்கில் பழுதுபடாதிருக்கும். சிறைச்சாலையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடும் காலங்களில் இந்த மாவு கைதிகளின் உயிரைப் பிடித்து வைப்பதற்குப் பெரிதும் உதவும். இவற்றைவிட அதைச் சுடுநீர் விட்டுக் குழைத்துப் பிட்டு அவிப்பார்கள். அந்தப் பிட்டு நல்ல சுவையாகவும் மென்மையாகவும் இருக்கும்.

இன்னொரு சாப்பாட்டைச் சோற்றில் செய்வார்கள். எஞ்சுகின்ற சோற்றை வெயிலில் காய வைத்து அரிசிபோல சேர்த்து வைத்துக்கொள்வார்கள். உணவு தவிர்ப்புப் போராட்ட காலங்களில் தண்ணீரைக் கொதிக்க வைத்துக் காயவைத்த அரிசியை வேக வைத்துச் சோறாக்குவார்கள். ஒன்றுமில்லாத நாள்களில் வயிற்றைக் கழுவ உதவும்.

ஒருநாள் சிறைச்சாலையில் பாசிப் பயறுக் கறி தந்தார்கள். ஒரு நண்பர் அந்தக் கறியின் சொதியை ஊற்றிவிட்டுப் பயறைக் கழுவியெடுத்துச் சீனி போட்டுத் துவைத்துப் பாண் மாவைக் குழைத்து மோதகம் அவித்தார். இவையெல்லாம் அங்கு புதினம்தான். கைதிகளின் முயற்சிகளைப் பாராட்டித்தான் ஆகவேண்டும். சிறை நிர்வாகம் கைதிகளின் உயிரை எவ்வாறு பிடித்து வைத்திருப்பது என்று சிந்திக்கும்போது கைதிகளும் தமது உயிரை எவ்வாறு பிடித்து வைத்துக்கொள்வது எனச் சிந்திப்பதன் விளைவே இந்த உணவு தொடர்பான முன்னேற்பாடுகளாகும்.

களுத்துறைபோல மின்அடுப்புகளைக் களவாகக் கைதிகள் பூசாவில் வைத்திருக்க முடியாது. எல்லாம் தனித்தனிச் சிறிய அறைகளாக இருப்பதால் அடுப்புக்களை மறைத்து வைத்திருந்து சிறைச்சாலை ஊழியர்களின் கண்ணில்படாமல் பாதுகாப்பது சிரமம். எல்லோரிடமும் இல்லாமல் ஓர் அறையில் மட்டும் இதை வைத்தால் அதுபற்றிச் சிறை நிர்வாகத்துக்கு மறக் கைதிகளே தகவல் கொடுக்க முற்படுவார்கள்.

பூசாவில் தேநீர் குடிப்பதற்காகத் தரப்பட்ட அலுமினிய ஜக்கில் (கைபிடியுள்ள ஒரு குவளை) ஓர் அங்குல அளவில் சதுரவடிவத் துவாரம் ஒன்றை அடிப்பாகத்தில் ஓரமாக வெட்டி எடுப்பார்கள். உள்ளே ஜாம் போத்தல் மூடி ஒன்றை வைத்து அதில் சிறிய துணிகளைப் போடுவார்கள். ஒரு பொலித்தீன் பையைப் பல மடிப்புகள் மடித்து 2 அங்குல நீளத்தில் மெழுகுதிரிபோல சுற்றி எடுப்பர். அதை நிறுத்தி வைத்துக் கொழுத்திவிட்டால் மெழுகுதிரி எரிவதுபோல சிறிதாக எரிந்து மூடியிலுள்ள துணியில் உருகி எரியும். பொலித்தீன் முழுதும் எரிந்து உருகி விட 10 நிமிடங்களாவது எடுக்கும். மேலும் 10 நிமிடங்கள் வரை மீண்டும் துணியுடன் சேர்ந்து அது எரியும். இதைத்தான் கைதிகள் தமது அறைகளில் அடுப்பாகப் பயன்படுத்துவார்கள். இந்த அடுப்பு எரிவதே தெரியாது. வெளிச்சமோ, மணமோ இருக்காது. அவ்வாறு தெரிந்தால் இரவுக் கடமையிலுள்ள ஊழியர் கண்டுவிடுவார்.

ஒரு நாள் இரவு இந்திக்க என்ற ஜெயிலர் கையெழுத்து வைக்க வரும்போது (ஒவ்வொரு மணித்தியாலமும் ஜெயிலர் ஒருவர் சிறைச்சாலையைச் சுற்றிப் பார்த்து அங்குள்ள குறிப்புப் புத்தகங்களில் ஒப்பமிடுவது வழக்கம்) கறியின் மணம் வந்ததால் ஒரு குறிப்பிட்ட அறைக்குள் எட்டிப் பார்த்து அந்த அறையின் திறப்பைக் கொண்டுவந்து திறந்து அடுப்பைக் கண்டுவிட்டார். அந்த அறைக்குள் சரண் என்ற இளம் கைதி ஒருவர் இருந்தார். மற்றைய 3 கைதிகளுக்கும் அவர் சொன்னார், "நீங்கள் கேட்டால் சொல்லுங்கே நாங்கள் சொல்லச் சொல்ல இவன்தான் செய்தவன் என்று. மிகுதியை நான் கதைக்கிறேன்" என்று. ஜெயிலர் கதவைத் திறந்தவுடன் ஜெயிலரிடம், "மம தம சேர் வெரதிக் காரயா" (நான்தான் சேர் குற்றவாளி) - என்றான் சரண். ஜெயிலர் எதுவும் பேசாமல் அடுப்பை எடுத்துக்கொண்டு போய்விட்டார். பின்பு அதற்காக நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

மொட்டை என்கிற கைதி ஒருவர் ஒருநாள் காலையில் சமைத்துக் கொண்டிருந்தார். அடுப்பை எரிப்பதற்குப் பழைய பேனைகள் சவரம் செய்யும் உபகரணத்தின் பிளாஸ்ரிக் கைபிடி ஆகியவற்றைப் பாவித்தார். பூட்டியிருந்த ஒவ்வொரு அறைகளையும் பார்த்துக் கொண்டு வந்த சிறை ஊழியர் அந்த அறையைப் பார்த்தபோது தனது சமையல் பற்றி கண்டுபிடித்துவிடுவார் என்று நினைத்த மொட்டை. சமையல் தொடங்க முன்பே ஒரு சாம்பிராணிக் குச்சியைக் கொளுத்திக் கதவில் கொழுவி விட்டார். காலையில் கொடுத்த சம்பலைப் பிழிந்து பாண் சாப்பிடுவதற்காகச் சொதி வைத்துக்கொண்டிருந்தார். சிறை ஊழியர் வந்ததும் அறையிலிருந்த ஏனைய கைதிகள் பயந்தார்கள். மொட்டை அதையெல்லாம் கருத்திலெடுக்காமல் அந்த ஊழியருடன் கதவருகில் நின்று சேர் சேர் என்று கதைத்தார். அந்தப் பேச்சுக்கிடையில் சொதி பொங்கிவிட்டது. அதைக் கரண்டியால் கலக்கிக் கொண்டே கதைத்தார். பூட்டியிருந்த கதவின் உட்புறமாக அந்த அடுப்பு இருந்தது. அந்த ஊழியருக்கு அவனது சமையல் புரியவில்லை. இறுதியில் மொட்டை சொன்னான் "ஐயாவுக்கு மூக்கு இல்லாதது எனக்கு நல்லதாப் போச்சு" என்று. அப்போது கூட அவருக்குப் புரியவில்லை. அவ்விடத்திலிருந்து போய்விட்டார்.

சிறைச்சாலைகளில் கைதிகளுக்கான சாப்பாட்டைப் பெரிய இரும்பு வாளிகளில்போட்டுத் தடியில் கொழுவித் தூக்கி வருவார்கள். அந்தத் தடியைத் தூக்கும்போது வாளிக் கைபிடி வாளிப் புருவத்தில் பட்டுச் சத்தத்தை எழுப்பும். தவிடு, புண்ணாக்கை வாளியில்போட்டுக் கொண்டு வரும்போது வாளிச்சத்தம் கேட்டவுடன் கட்டி நிற்கும் மாடுகள் தலையைத் தூக்கி ஆர்வத்துடன் பார்ப்பதுபோல களுத்துறையில் வாளிச் சத்தம் கேட்டவுடன் "லஷ்மி வந்திட்டுது" (சாப்பாடு வந்துவிட்டது) என்று கைதிகள் பெரிதாகக் கத்துவார்கள்.பூசாவில் இதை "காவடி வந்துவிட்டது" என்று சொல்வார்கள்.

(தொடரும்)

# மானுமோரஸ்

சரவணன் சந்திரன்



'இந்த ஊரிலேயே பேரழகி என ஒருத்தியைக் காட்டுகிறேன். எப்பாடுபட்டாவது அவளை எனக்கு இரையாக்கிவிடு' என ரெகார்டோவிடம் சொன்னபோது, உடனடியாக அவன் 'மானு மோராஸ்' என்றான். அதுவொரு கெட்ட வார்த்தை என்பது எனக்கு உடனடியாகவே புரிந்தது. 'இதுதான் எனக்கு வேலையா?' என அவன் அடுத்த வாக்கியத்தைச் சொன்ன பிறகே அவ்வார்த்தையின் மிகக் கெட்ட அர்த்தத்தை விளங்கினேன். ரெகார்டோ இப்படித்தான் எப்போது பார்த்தாலும் இந்த வார்த்தையை அடிக்கடி எச்சிலைப் போலத் துப்பிக்கொண்டே இருப்பான். இந்தியாவில் அம்மாவைக் குறிக்கும் வசைச்சொல் போல அது கடுமையானதாக இருக்கக்கூடும் என எண்ணிக்கொண்டேன்.

ஆஸ்திரேலிய தொண்டு நிறுவனம் ஒன்றின் களப்பணி ஆற்றும் பொறுப்பில் இருக்கும் நான், முதன்முதலாக ரெகார்டோவை நண்டு வளர்ப்பு மையம் ஒன்றில்தான் சந்தித்தேன். ஆஸ்திரேலிய நாட்டு நிதியுதவியுடன் உள்ளூர் மீனவர்களுக்குக் காயல் நண்டு வளர்க்கும் பயிற்சியை அளிக்கும் திட்டம் அது. கடலும் ஆறும் சந்திக்கும் முகத்துவாரமான காயலில்தான் இந்நண்டுகள் உயிர்வாழும். காயலில் இருக்கும் அலையாத்திக் காடுகளின் அடியில் இவை கூட்டமாய் கொடுக்குகளை ஆட்டியபடி ஊறிக்கொண்டிருக்கும். அந்த இடத்தில் நண்டுக் குஞ்சுகளை வாங்கி செயற்கையாகப் பொறிக்கச்செய்து அவற்றை வளர்க்க வேண்டும்.

வெளிநாடுகளில் அவற்றிற்கு நல்ல வரவேற்பு இருப்பதால் அவற்றை ஏற்றுமதி செய்து உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அந்தத் தன்னார்வ அமைப்பு வேலை செய்துகொண்டிருந்தது. அந்த அமைப்பின் தலைவி பிரிட்டிஷ்காரி. என்னைவிட ஐந்து வயது மூத்தவள். நேரிடையாகவே எப்போது அறைக்கு வருகிறாய் எனப் பலதடவை கேட்டுவிட்டாள். உடல் கொதிக்கப் படுத்தபடி யோசித்தும், அவளது முகத்தின் கன்னத்துச் சதையில் இருந்த அதிகப்படியான சுருக்கம் என்னை எழுச்சி கொள்ள வைக்கவில்லை. ஆனால் முகத்திற்குக் கீழுள்ள அவளது உடல் என்னைப் புத்துணர்ச்சி கொள்ளச் செய்தது. முகத்தை மட்டும் விட்டுவிட்டு ஒட்டுமொத்த உடலையும் எப்படி அணைத்துக்கொள்வது என்கிற தீவிர சிந்தனையில் இருந்தேன்.

அவளது முகத்தை மறந்துவிட்டு, சில நேரங்களில் படுக்கையில் புரண்டிருக்கிறேன். உச்சத்தை அடைகிற பயணத்தில் கடைசி நிமிடத்தில் முகம் அவசியமாக இருக்கிறது என்பதை உணர்ந்தேன். தனியான சந்தர்ப்பங்களில் அவள் என்னை மெல்ல உரசும் போது, வேண்டாம் என்று மறுத்ததில்லை. அவளது முகத்தைப் பார்க்காமல் நானும் உரசிக்கொள்வேன். என்றைக்காவது ஆத்திர அவசரத்திற்குத் தேவைப்படுவாள் என்கிற மாதிரி நண்டின் வலையிலேயே வைத்திருந்தேன். அவளுக்குமே அது போதுமானதைப் போலவும் பட்டது எனக்கு.

இரண்டு கொடுக்குகளையும் விரித்து ஒரு புல்டோசர் நடந்து வருவதைப் போல நடந்துவந்த அந்தப் பச்சை நண்டை அப்படியே முதுகிற்குப் பக்கத்தில் பிடித்துத் திருப்பிப் போட்டு, தனது பெருவிரலால் அதன் வயிற்றை மிதித்தான் ரெகார்டோ. நண்டு தனது கூர்கொடுக்குகளை வானை நோக்கி ஆட்டியது. பின்னர் சணல் கயிற்றால் அதன் கொடுக்குகளைக் கட்டி, முதுகோடு சேர்த்துக் கோர்த்து மண்ணில் போட்டான். நண்டு அப்போதும் அசைந்துகொண்டிருந்தது. ஆனால் அதன் உலகம் மனிதனின் கால் சுற்றளவிற்குச் சுருங்கிவிட்டது. ஒவ்வொரு நண்டாய் இப்படி அவன் கட்டும் வேகத்தை வியந்து பார்த்தேன். 'கொடுக்குதான் ஆபத்து. மத்தபடி பயனுள்ள உயிர்' என்றான் விநோதமாகப் பார்த்துக்கொண்டிருந்த என்னிடம்.

உள்ளூரில் கொஞ்சம் படித்த ரெகார்டோ, தட்டுத்தடுமாறி சுமாரான ஆங்கிலம் பேசிவிடுவான். அவனுக்கு அந்தத் தீவு தேசத்தின் மேல் மட்ட அரசியல்வாதிகள் வரை நல்ல தொடர்பு இருந்தது. ஆனால் யாரிடமும் அவன் கையேந்தி நின்றதில்லை என்பதையும் பார்த்திருக்கிறேன். அவனுடைய அப்பா சுதந்திரப் போராட்டத் தியாகிக்கான பென்சன் வாங்கிக்கொண்டிருக்கிறார். அதனாலேயே என்னவோ நாட்டுக்கு எதிரான தீவிரமான திட்டங்கள் எதிலும் பங்கெடுத்துக் கொள்ளவே மாட்டான். ஒருதடவை ஆமைக்கறி வேண்டுமென கேட்டபோது, 'ஐ.நா அதைப் பிடிப்பதற்குத் தடைசெய்திருக்கிறது அல்லவா? அப்புறம் ஏன் எங்கள் நாட்டில் மட்டும் அதைப் பிடிக்கச் சொல்லுகிறாய்? இல்லாமல்பட்டவர்கள் என்றால் இளக்காரமா?' என்றான் தீவிரமான குரலில்.

அதற்கடுத்து அவனோடு அந்த மாதிரி விஷயங்களைப் பேசுவதை நிறுத்திக்கொண்டேன். ஒருதடவை இந்தியாவில் இருந்து மிகப் பெரிய எண்ணெய் நிறுவனம் அந்த நாட்டில் காலூன்ற விரும்பி என் வழியாகத் தொடர்புகளைத் திரட்டச் சொன்னார்கள். அது பெரும் பணம் ஈட்டும் திட்டம் என்பதால் ரெகார்டோவிடம் நைச்சியமாகப் பேசிப் பார்த்தேன். 'என்றைக்காவது இப்படி எங்களது மண்ணை உறிஞ்ச ஆட்கள் கிளம்பிவந்து அதில் வெற்றியும் பெறத்தான் செய்வார்கள். அதை என்னால் தடுக்க முடியாது என்பது தெரியும். ஆனால் அப்படியொரு வேலையில் என் கை இருப்பதை நான் அனுமதிக்க மாட்டேன். இந்த மண்ணில் இருந்து எடுத்து உண்டிருக்கிறேன்' என்றான்.

இதுபோன்ற வேலைகளில் நானுமே கத்துக்குட்டிதான் என்பதையும் ரெகார்டோ அறிந்திருந்தான் என்பதால், என்னை விலக்கமாகக் கருதவில்லை. என்னுடைய கனவுகள், திட்டங்கள் எல்லாவற்றையும் அவனிடம் விவரித்திருக்கிறேன். அவனுக்குமே அப்படியானவைகள் இருக்கின்றன என்பதால் என்னோடு அதிக நெருக்கம் காட்டி, அவனது உள் வளையத்திலும் இணைத்துக்கொண்டான். என்னுடைய நிறுவனதின் புராஜெக்ட்களில் அவன் இலாப நோக்கம் தாண்டி எனக்காகப் பங்கெடுத்தான். நானுமே அவனுக்கு நியாயமான வழிகளில் பணம் வருவதற்கு வழிவகைகள் செய்து கொடுத்தேன். அந்த வகையில் எங்களுக்குள் நல்ல புரிதல் இருந்தது. அவன் வழியாக தேத்தூம் மொழியை நான் கற்கவும் செய்தேன்.

நேவல் மலையின் உச்சியில் இருக்கும் கிராமம் ஒன்றில் அடிப்படை வசதியை மேம்படுத்தித் தரும் பணி ஒன்றை எங்களது நிறுவனம் மேற்கொண்டது. அங்கே இரண்டு மாதங்கள் நான் போய் தங்கியிருந்து அந்தப் பணிகளை ஒருங்கிணைத்து முடித்துக் கொடுக்க வேண்டுமென நிறுவனம் கோரியது. இப்பணியைச் சிறப்பாக முடித்துக் கொடுத்தால் மலேசியாவில் ஊதிய உயர்வுடன் இன்னொரு புராஜெக்ட் என்றார்கள். என்னால் தனியாகப் போக முடியாது என்பதால் ரெகார்டோவையும் உடன் அழைத்துச் செல்ல நிறுவனத்தின் சிறப்புப் பிரிவு அனுமதி தந்தது.

அதற்கு முன்னே நான் அப்படியான மலைகளில் ஏறியதே இல்லை. எங்களூரில் மலை என்று சொல்லி சிறியதொரு குன்றே இருந்தது. சிறு குன்றில் ஏறியவனை அம்மலையுச்சி ஈர்த்தது. நகரின் சூப்பர்

மார்க்கெட்டிற்கு என்னை அவனுடைய வெள்ளை ஆம்னி வேனில் அழைத்துப் போனான் ரெகார்டோ. ஒரு மாதத்திற்குத் தேவையான மளிகைப் பொருட்களை வாங்கி அடுக்கிக்கொண்டிருப்பதைப் பார்த்த ரெகார்டோ, 'எங்களுடைய நாட்டில் யாரையும் பசியோடு இருக்க அனுமதிக்க மாட்டோம். இப்படி நீ வாங்கிக் குவிப்பது உன்னுடைய அவநம்பிக்கையைக் காட்டுகிறது' என்றான்.

அதை அவன் சீண்டப்பட்டவன் வெளியிடும் மூச்சுக் காற்றைப் போலத் தீவிரமான குரலில் சொன்னதால், பட்டும்படாமல் சில பொருட்களை மட்டும் எடுத்துக்கொண்டு விரைந்தேன். அவனுக்கும் எனக்கும் தரமான விஸ்கி பாட்டில்களையும் போகிற போக்கில் பொறுக்கிக்கொண்டேன். அந்த வகையில் அவனுக்குமே மகிழ்ச்சிதான் என்பதைச் சிப்பி போல் ஒளிர்ந்த தன்னுடைய வெண்பற்களைக் காட்டிச் சிரித்தபோது உணர்ந்துகொண்டேன். எதிர்பார்த்ததைவிட உயர்ந்து பெருகிக்கொண்டே இருந்தது மலை. ஒருகட்டத்திற்கு மேல் ஆம்னி வேன் மூலமாகச் செல்ல முடியாது என்றார்கள். அங்கேயே ஒரு வீட்டில் நிறுத்திவிட்டு மேலும் இரண்டு மலைகளைக் கடந்து நடக்க வேண்டும் என்று சொன்ன போதுதான் முதன்முறையாக எனக்குள் அவநம்பிக்கை பீறிட்டது. என்னால் ஏறவே முடியாது என அக்கணத்தில் உணர்ந்தேன்.

அந்த வேலையை உதறிவிடலாம் என்றுகூட அந்த நேரத்தில் தோன்றியது. அதை ரெகார்டோவிடம் சொல்லவும் செய்தேன். 'இந்த உச்சிக்கே இப்படியா? உலகத்தில் இது மாதிரி பல உச்சிகள் இருக்கு. மலைக்கு உன்னை ஒப்புக் கொடுத்திட்டு சும்மா வேடிக்கை பார்த்துக்கிட்டு மட்டும் நட. அது உன்னைக் கைப்பிடிச்சு மேல தூக்கிட்டு போயிடும்' என்றான் பதிலுக்கு. ஏனோ அந்த நேரத்தில் அவனுடைய குரலைவிட அதை அவன் சொன்னவிதம் எனக்கு உத்வேகமாக இருந்தது. முதல் மலையைத் தாண்டுவதற்கு முன்பே எனக்கு மூச்சு முட்டிவிட்டது. மிச்சமிருந்ததைத் தவழ்ந்தே கடந்தேன். கடைசி அடியை எடுத்து அந்த மலையுச்சியில் வைத்தபோது வெண்மேகக் கூட்டமொன்று என்னைக் கடந்து போனது. முகத்தில் சில்லென்ற ஓர் உணர்வு.

உச்சியை முத்தமிட்டுவிட்டேன் என்கிற பெருமிதம் என் நெஞ்சில் பரவியதை உணர்ந்தேன். எழுந்து ஆசுவாசப்படுத்திவிட்டு, உச்சியில் இருந்து பள்ளத்தைப் பார்த்து என்னை நானே வியந்து கொண்டேன். இத்தனை உயரத்தை நானா ஏறி வந்தேன்? என் மனநிலையை ரெகார்டோவும் உணர்ந்து, என்னை ஊக்கப்படுத்தும்படியான பல சொற்களை உதிர்த்துக்கொண்டிருந்தான். நானொரு நிலைக்கு வந்தபிறகு ரெகார்டோவை அணைத்துக் கட்டிக்கொண்டேன். இந்த உலகத்தில் எதையும் என்னால் செய்ய முடியும் என அக்கணத்தில் உணர்ந்தேன்.

அன்றைய இரவு எங்களுக்குத் தங்க ஒதுக்கப்பட்டிருந்த குடில் வாயிலில் நெருப்பு மூட்டி எல்லா ஏற்பாடுகளையும் செய்து வைத்திருந்தார் ஊர்த்தலைவர். அவர் தேசச் சண்டையில் பங்கெடுத்ததற்கான பதக்கத்தைத் தன்னுடைய தோளில் கிடந்த சால்வையில் அணிந்திருந்தார். பொது இடங்களில் புழங்குகையில் இவ்வாறு குத்திக்கொள்வது அவர்களுடைய வழக்கம் என அறிந்துகொண்டேன். அவ்வாறு அணிவதை அவர்கள் பெருமையாகவும் கருதினார்கள். அந்தப் பதக்கத்தை வருடியபடி அந்த இரவில் அந்த நாட்டின் முழுக் கதையையும் என்னிடம் சொன்னார் அந்த ஊர்த்தலைவர். அந்தக் கதை ரெகார்டோவிற்கு ஏற்கனவே தெரிந்திருந்தது என்பதால் அவன் எழுந்து குச்சிகளை எடுத்துவந்து நெருப்பை அணைய விடாமல் மட்டும் பார்த்துக்கொண்டிருந்தான். அந்தக் காட்சியே ஒரு உருவகம் போல எனக்குத் தோன்றியது.

கடுமையான மலையேற்றம், தரமான விஸ்கி போதை இணைந்த இலயத்தில் அந்தக் கணப்பிற்கு அருகிலேயே தூங்கிவிட்டேன். குளிரடிக்கிற உணர்வே இரவுத் தூக்கத்தின் இடையே ஏற்படவில்லை. நிலவும் நட்சத்திரங்களும் ஒளிர்ந்துகொண்டிருந்த நள்ளிரவில் விழித்துப் பார்த்தபோது அப்போதும் ஊர்த்தலைவர் அமர்ந்து கணப்பை அணையவிடாமல் நெருப்பு மூட்டிக்கொண்டிருந்தார். அந்தத் தூக்கத்திலும் பதற்றம் வந்துவிட்டது எனக்கு. எல்லோரையும் தொந்தரவுக்கு உள்ளாக்கிறேன் என என்னை நானே கடிந்துகொண்டு, எழுந்து, தட்டுத்தடுமாறிக் குடிலுக்குள் போய்ப் படுத்தேன். அங்கே ரெகார்டோ குறட்டைவிட்டுத் தூங்கிக்கொண்டிருந்தான்.

காலையில் எங்களுக்கு ஊர்ப் பொதுமுனையில் கூட்டம் இருந்தது. ஏதோ தேவகுமரன் மண்ணில் இறங்கி வந்ததைப் போல அந்த மக்கள் என்னை நடத்துவதை குடிலின் வாயிலில் கால் வைத்த நேரத்திலிருந்து புரிந்துகொண்டேன். வயதில் பெரியவர்கள்கூட மண்டியிட்டு வணங்கினார்கள். பெண்கள் வணங்கிவிட்டு வெட்கப்பட்டுக்கொண்டு எதிரே இருந்த எதுவோ ஒன்றின் பின்புறம் மறைந்தார்கள். குழந்தைகளை மட்டுமே பக்கத்தில் பார்க்க முடிந்தது. மற்ற எல்லோருமே ஒருவகையில் விலகி தொண்டனிடுவதைப் போலவே என்னைச் சுற்றிப் போர்த்தினார்கள்.

அவர்களுக்குக் கல்வி, சுகாதாரம் என அடிப்படை வசதிகளிலேயே நிறையத் தேவைகள் இருந்தன. என்னுடைய செல்போனை வியப்பாக வாங்கித் தொட்டுத் தடவிப் பார்த்தார்கள். ரெகார்டோ நான் பேசியதை எல்லாம் தேத்தூம் மொழியில் விரிவாக அவர்களுக்குப் புரிய வைத்தான். நானுமே இடையிடையே தேத்தூம் மொழியில் சில வாக்கியங்களைப் பேசினேன். அப்போதெல்லாம் பெண்கள் மத்தியில் இருந்து சிரிப்பலை வந்தடங்கியது. அந்தக் கூட்டத்தில் ஒருபெண் மட்டும் எனக்குத் தனித்துத் தெரிந்தாள். அதிகம் போனால் இருபது வயது இருக்கலாம். ஆனால்

**ஒருதடவை அவளது குழந்தை அவளது சட்டைப் பித்தான் களைக் கழற்றி அவளது மார்பில் கைவிட்டுத் துழாவிய போதும், அதை அறியாமல் என் உதடுகளையே பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் குழந்தையில்லாமல் வந்து நிற்கிற போது எனக்கு உற்சாகம் தொற்றிக்கொள்ளும்.**

இடுப்பில் ஒரு குழந்தையைத் தாங்கி இருந்தாள். வெள்ளை பனியனுக்குப் பின்னே இரண்டு திரண்ட மார்புகள் குலுங்கிக்கொண்டிருந்தன. அப்படி உருண்டையாய் ஒன்றுதிரண்ட மார்புகளை அதற்கு முன் நான் பார்த்ததே இல்லை என்பதையும் அக்குறுகிய நொடிகளில் உணரவும் செய்தேன். என்னை அந்தப் பெண் கூர்ந்து பார்த்ததைப் போல இருந்ததால் சட்டென என் பார்வையை விலக்கியும் கொண்டேன்.

இறுதியாக ஊர்த்தலைவர் அந்த மக்களிடம் பேசுகையில், ஊரை உயர்த்த வந்திருப்பதாக எல்லாம் மிகையாகச் சொன்னதைக் கேட்கையில், கூச்சமாக இருப்பதைப் போல உடல்மொழியைக் கூட்டத்திடம் வெளிக்காட்டினேன். காட்டுக் கோழியொன்றை முழுவதுமாக வறுத்து பெரிய அரிசிச் சோற்றில் ஊறுகாய் மாதிரி ஒரு திரவத்தைப் பிசைந்து பச்சைக் கீரையொன்றுடன் சாப்பாடு தயார் செய்திருந்தார்கள். எல்லோரையும் கவனித்துப் பார்த்தேன், யாருமே அங்கே பெருந்தீனி உண்ணவில்லை. பிறகு இதைப் பற்றி ரெகார்டோவிடம் கேட்டபோது, 'எங்களுடைய தேசத்தில் போர் நடந்துகொண்டிருந்த போது மிகப்பெரிய உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. அதனால் மக்கள் பிறருக்கும் உணவு வேண்டும் என்று சொல்லி அரைவயிறு மட்டும் வலுக்கட்டாயமாகச் சாப்பிட்டார்கள். இப்போது சுதந்திரம் கிடைத்த பிறகும் அந்தப் பழக்கம் எங்களைத் தொடர்கிறது. வானம் பெரிதாகிவிட்டது. வயிறு மட்டும் இன்னமும் ஒரு பறவையைப் போலச் சுருங்கியே இருக்கிறது' என்றான்.



முதல்நாள் கூட்டத்தில் நான் பார்த்த பெண்ணின் வயிறுமே அவ்வாறே இருந்தது. அவளது வயிறு உள்ளொடுங்கி இரு மார்புகள் விண்ணென முன்னோக்கித் தள்ளி நின்றன. இந்தியாவில் சிலைகளில் மட்டுமே இவ்வாறான காட்சியை அதற்குமுன் கண்டிருக்கிறேன். இரண்டாவது தடவை இந்தக் காட்சியை நான் பார்த்தபோது அவள் ஊர்த்தலைவரின் வீட்டின் பின்புறம் நின்றிருந்தாள். அப்படி உற்றுக் கவனிப்பதை அவளுமே உணர்ந்திருந்தாள் என்பதை அவளுடைய அங்கத்தின் மெல்ல சைவுகளில் உணர்ந்தேன். ரெகார்டோ எனக்குப் பின்னால் நடந்து வருகிற சத்தத்தைக் கேட்டவுடன் பார்வையை விலக்கி, ஊர்த்தலைவரைத் தேடினேன்.

முதல்கட்ட உதவிப் பொருட்கள்

வந்து சேர்ந்துவிட்ட தகவலை அவரிடம் சொல்லப்போன போதுதான் இந்தக் கணநேரத் தரிசனம் கிடைத்தது. அவர் எங்களுக்கு பானகம் எடுத்துவரச் சொன்ன போது, அந்தப் பெண் அறையில் இருந்து வெளியே வந்தார். 'ஏமி' என எனக்கு அவளை அறிமுகப்படுத்தினார் ஊர்த்தலைவர். அவருடைய மனைவியவள் என்பதை அப்போதுதான் அறிந்துகொண்டேன். அப்போது எனக்குச் சற்றே ஏமாற்ற உணர்வு எழுந்தது. அவளுமே என் கண்களைச் சந்திக்காமல் ஒரு பூனையைப் போல நடந்து வெளியேறி என் இருப்பை உறுதி செய்தாள்.

திரும்பப் போகையில் என் மௌனத்தைக் கவனித்தபடி நடந்து வந்தான் ரெகார்டோ. நானுமே எந்தச் சந்தேகத்தையும் வழங்கிடாதபடி தீவிரமாக வேலையைப் பற்றி யோசிப்பது போல என் தொலைபேசியை எடுத்து அடிக்கடி நோண்டிக்கொண்டு நடந்து போனேன். பிறகு பல சந்தர்ப்பங்களில் அவளைப் பார்த்தேன். தனியாக இருக்கும் சமயங்களில் அவள் தள்ளியே இருந்தாள். ஆனால் சிலரை நிறுத்திப் பேசிக்கொண்டிருக்கையில் மட்டும் கூட்டத்தோடு வந்து கலந்துகொண்டாள்.



ஆர்வமாக என் உதடுகளையே கூர்ந்து பார்த்து நான் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருப்பாள். அத்தகைய சமயங்களில் நான் அவளுடைய மார்புகளை நோட்டம் விடுவேன். ஒருதடவை அவளது குழந்தை அவளது சட்டைப் பித்தான்களைக் கழற்றி அவளது மார்பில் கைவிட்டுத் துழாவிய போதும், அதை அறியாமல் என் உதடுகளையே பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் குழந்தையில்லாமல் வந்து நிற்கிற போது எனக்கு உற்சாகம் தொற்றிக்கொள்ளும். என்னை யாராவது பார்க்கிறார்களா என்கிற உணர்வின்றிகூட சில சமயங்களில் அவளை வெறித்துப் பார்த்திருக்கிறேன். காட்டு மரங்களிடையே நுழைந்து வளைந்து போகும் காற்றைப் போல என் கண்கள் சுழலும்.

அவளைச் சந்திக்க வேண்டும் என்பதற்காகவே அடிக்கடி இப்படி கும்பலைக் கூட்டிப் பிரசங்கம் செய்வது எனக்கு வழக்கமாகிப் போனது. ரெகார்டோ அதை அறிந்திருப்பானா என்கிற குறுகுறுப்பும் எனக்கிருந்தது. உயரதிகாரி என்பதால் பிரசங்கம் எங்களது பிறப்புரிமை என்பதில் யாருக்குமே கேள்வி இருக்காது என்கிற எண்ணம் எனக்கு ஆசுவாசத்தைத் தந்தது. அடிக்கடி ஊர்த்தலைவர் நானிருக்கிற இடத்திற்குத் தேடி வந்து மண்டியிட்டு வணங்கிப் போவார். 'அவர் கடவுளுக்கு அடுத்து உதவி பண்ற உனக்குத்தான் இப்படி மண்டியிட்டு கும்பிடறார்' என்றான் ரெகார்டோ ஒருதடவை. அவர் இருக்கிற சமயத்தில் மறந்தும் நான் எதையும் வேடிக்கை பார்ப்பதில்லை. கூர்மையாக அவரோடு மட்டுமே என் கவனத்தைக் குவித்திருப்பேன். ஏனெனில் கண்களைச் சுருக்கி உற்றுப் பார்த்துப் பேசும் வழக்கமுடைய மனிதர் அவர்.

அன்றைக்கு அவர் வந்தபோது, வரவிருக்கும் பொருள், பண உதவிகள் பற்றிய காகிதத்தை அவரிடம் நீட்டினேன். உடன் இருந்த ரெகார்டோ, இவ்வளவு பெரிய உதவி இந்தப் பிராந்தியத்தில் வேறு யாருக்குமே கிடைத்ததில்லை என்று அவரிடம் உரத்த குரலில் சொன்னான். அகமகிழ்ந்த அவர், விரைவில் விருந்தொன்றைத் தயார் செய்வதாகச் சொன்னார். அங்கே நானிருந்த குறுகிய காலகட்டத்தில் அவளிடம் நல்ல பார்வைகளைச் சம்பாதிப்பதற்காகச் சுற்றிச் சுற்றிப் பணியாற்றினேன். இரவுகளில் அவளை நினைத்தால் உடல் மதமதப்பாக இருந்தது. வலுக்கட்டாயமாக வேறு பெண்களின் மீது கண்களைச் செலுத்திப் பார்த்தேன். எங்கும் மனநிறைவு எனக்குக் கூடிவரவில்லை. எண்ணங்கள் அவளது உதட்டுச் சுழிப்பை மட்டுமே சுற்றி வந்தன. அந்தக் காட்டில் அவளைப் பல மறைவிடங்களில் நிறுத்தி, கற்பனையிலேயே பலமுறை கூடிப் பார்த்தேன்.

அங்கு வந்து ஒன்றரை மாதங்கள் கடந்திருந்தன. இன்னும் பதினைந்து நாட்களில் இம்மலையைவிட்டு இறங்க வேண்டும் என்கிற நினைப்பே எனக்கு வேப்பம் பட்டையைப் போலக் கசப்பாக இருந்தது. மூக்குமுட்ட அன்றைக்குக் குடித்திருந்த ரெகார்டோவிடம் மெல்லப் பேச்சுக் கொடுத்தேன். 'ஊர்த்தலைவர் வயசானவரு. ஆனா அந்தப் பொண்ணு சின்ன வயசா இருக்கே. எப்படி?' என்றேன். போதை விலகியவனைப் போலத் தெறித்து வெறித்து என்னையே பார்த்தான். பின்னர் சிகரெட்டை அணைத்துவிட்டு என் கண்களைப் பார்த்து, 'ஊர்த்தலைவரின் மனைவி சின்னப் பெண்ணோ பெரிய பெண்ணோ.. ஆனால் அவள் எங்களுடைய தாய். ஏனெனில் அவர் எங்களுடைய தந்தை. எல்லோருமே இதை இங்கே விதியைப் போலப் பின்பற்றுகிறோம். இந்த மண்ணில் கால் வைத்த உனக்குமே அவ்வாறுதான். கொடுக்கு இருப்பதாலேயே நண்டின் காலைக்கூடக் கட்டுகிறோம். சுதந்திரமாய் இருப்பவர்களுக்குப் பொறுப்புண்டு" என்றான். குற்றவுணர்வுடன் கண்களைத் தாழ்த்திக்கொண்டேன். அதற்கடுத்து என் முதுகிற்குப் பின்னால் ரெகார்டோவின் கண்கள் தொடர்வதைப் போலவே எனக்கொரு எண்ணம் இருந்தது.

அவனுக்கு வேறு வேலைகள் கொடுப்பதைப் போல வேறு திக்கில் அனுப்பிவிட்டேன். ஆனாலும் அவனது பார்வை உறுத்தல் எனக்குள் இருந்துகொண்டே இருந்தது. இறுதியாய் அவர்களுக்கான உதவிப் பொருட்களை வழங்கிவிட்டு மலையிறங்குவதாகத் திட்டம். அடுத்ததாக மலேசியாவில் நடைபெறவுள்ள ஒன்றரை வருடப் புராஜெக்டிற்கு உடனடியாகக் கிளம்ப வேண்டும் எனச் செய்தி ஒன்றையும் அலுவலகம் அனுப்பியிருந்தது. அதுவும் ரெகார்டோவிற்கு நன்றாகத் தெரியும். மலேசியா போய்ச் சேர்ந்த பிறகு அங்கே அவனை அழைத்துக்கொள்வதாக வாக்கும் கொடுத்திருந்தேன். அதனால் கொஞ்சம் மிகையான பணிவுடன் அவன் என்னிடம் நடந்துகொள்வதைப் போலக்கூட எனக்குத் தோன்றியது. ரெகார்டோ கீழே போய் தேவையானவைகளை எடுத்துக்கொண்டு மீண்டும் மலையேறி என்னை அழைத்துக்கொண்டு போவதாகத் திட்டமிட்டு, அதன்படி ரெகார்டோ கிளம்பிப் போனான். அதுவரையில் பீடித்திருந்த ஒன்றிலிருந்து விடுபட்டுவிட்ட உணர்வை அடைந்தேன். யானைக் காதைப் போலவிருந்த பெரிய இலையொன்று காற்றில் ஆடுவதை வேடிக்கை பார்த்தேன்.

என்னுடைய குடிலில் அமர்ந்திருந்த போது, ஊர்த்தலைவர் வந்து தன் வீட்டுக்கு வருமாறு அழைத்தார். கையில் விஸ்கி போத்தலுடன் அவருடன் கிளம்பிப் போனேன். எனக்கு முயல் ஒன்றை வறுத்து வைத்திருந்தார். அவருடைய பதக்கத்தை வருடியபடி பழம்கதையை எனக்குச் சொல்லிக்கொண்டிருந்தார். அவள் என் பார்வையில் படுகிற தோரணையில் அப்பக்கம் சுற்றுவதை அறிந்தே இருந்தேன் என்றாலும், அவர் இருக்கிறார் என்பதால் அந்தப் போதையிலும் கவனத்தைச் சிதறவிடாமல் இருந்தேன். ஏனோ அன்றைக்கு அவர் அதிகமாகக் குடித்தார். சில தடவை தடுத்துக்கூடப் பார்த்தேன்.

என் பேச்சைக் கேட்கும் நிலையைத் தாண்டியிருந்தார். தன் பதக்கம் தாங்கிய தோள்துணியை மண்ணில் கீழே போட்டுவிட்டு, வெறிகொண்டு குடித்தார். ஆனால் ஒரு வார்த்தை மீறிப் பேசி என்னோடு சண்டையிடவில்லை. என் அமைதியையும் அவர் அனுமதித்தார். அந்த நெருப்பின் நடனத்தைப் பார்த்துக்கொண்டே முழுப் போத்தலையும் கையில் தூக்கி வாயில் கவிழ்த்துச் சப்பிக் குடித்தார். நினைவு தடுமாறி அவர் கால்நீட்டி நெருப்பின் தடத்தில் விழுந்து உறங்கத் தொடங்கினார். அவரைத் தட்டி எழுப்பிப் பார்த்தேன். அவரால் காலையில்கூட எழுந்திருக்க முடியுமா என்கிற சந்தேகம் அப்போது எழுந்தது.

எந்தத் திட்டமும் இல்லாமல் அவரது குடிலை நோக்கி நடந்தேன். என் வருகையை எதிர்பார்த்திருந்தவள் போல, அமைதியாய் கையில் ஒரு குவளையை ஏந்தி நின்றாள். தயக்கத்தோடு அருகில் இருந்த சுவரில் சாய்ந்துகொண்டேன். அதிக முறை கற்பனைகளில் நிகழ்த்திப் பார்த்த நெருக்கம்தான் அது என்றபோதிலும், அப்போது படபடப்பாக இருந்தது. என் மூச்சுக்காற்று எனக்கே நன்றாகக் கேட்டது. அவளிடம் எந்த மொழியில் பேசுவது என்கிற குழப்பம் அப்போது எழுந்தது. எங்களுக்கு இடையில் காற்று கடந்துபோனதைத் துணியாடலில் உணர்ந்தேன்.

தட்டுத்தடுமாறி தேத்தும் மொழியில், 'அவரை என்ன செய்வது?' என்றேன். ஒன்றும் செய்ய வேண்டாம் எனச் சைகை செய்துவிட்டு குடிலின் பின்பக்கம் அவள் நடந்து போனபோது, பின்னாலேயே தொடர்ந்தேன். இடுப்பு உயர மர மேசை ஒன்றின் மீது ஏறிப் படுத்தாள். கால்களை நீட்டி, கைகளை விரித்து, உதட்டைச் சுழித்து, என்னை வாவென அழைத்தாள். அதுவரை இருந்த தயக்கங்களை மீறி அவள் மீது துள்ளி ஏறிப் படுத்து அவளது மார்பில் முகத்தைப் புதைத்துக்கொண்டேன். என் முதுகிற்குப் பின்னே நெருப்பின் நடனம் தொடர்ந்தது.

பெருமூச்சடங்கி எழுந்து அவளது முகத்தைப் பார்ப்பதைத் தவிர்த்து, வேகமாக உடைகளை அணிந்து குடிலைச் சுற்றிக்கொண்டு ஓடிவந்து பார்த்தேன். ஊர்த்தலைவர் அப்போதும் அசந்து உறங்கிக்கொண்டிருந்தார். என் குடிலுக்குத் திரும்பி வந்து மேலும் குடித்து அதை மறக்க விரும்பினேன். ஆனாலும் நாவில் சுவையாய் ஒரு இனிப்பு நீடித்தது. அதை விரைவில் விஸ்கியின் கசப்பு அலைபோல் எழுந்து மூடியது.

அடுத்த நாளே நாங்கள் திரும்பிக் கிளம்பிப்போக வேண்டியிருந்தது. அதிகாலை எழும்போது சோர்வு அதிகமாக இருந்தது. 'என்ன நேத்து ரெண்டு பேரும் பயங்கர குடியோ? அவரும் கீழே நம்மோட வர்றாரு. மினிஸ்ட்டரீல அவரும் ஒரு கையெழுத்து போடணுமாம்' என்ற ரெகார்டோவின் பார்வையைத் தவிர்க்க விரும்பினேன். கீழே இறங்குகையில் இருவரிடமுமே குறைவான சொற்களில்தான் பேசினேன். ஆனால் ஊர்த்தலைவர் என்னோடு சகஜமாகப் பேசிக்கொண்டிருப்பது போலத் தோன்றியது.

எல்லோரும் இயல்பாய் அந்த மலையைவிட்டு இறங்கி நகரத்தை அடைந்த உணர்வு அங்கே மேலோங்கியது. மறுநாள் விமானத்தில் மலேசியாவிற்கு நான் பெட்டி, படுக்கைகளுடன் கிளம்பும்போது, அந்த ஊர்த்தலைவரும் விமான நிலையத்திற்கு வந்திருந்தார். ரெகோர்டோவையும் அவரையும் சேர்த்துப் பார்த்தபோது கண்களைத் தாழ்த்திக்கொண்டேன். எனக்கு லைட்டர் ஒன்றை வாங்க ரெகார்டோ சென்றிருந்த இடைப்பட்ட நேரத்தில் ஊர்த்தலைவர் என்னுடைய கையில் காகிதமொன்றைத் திணித்தார். தூரத்தில் இருந்து ரெகார்டோ அதைப் பார்த்த மாதிரிக்கூடத் தோன்றியது எனக்கு. பின்னர் நிமிர்ந்து தன் முகத்தில் அப்போது அவர் காட்டிய பாவத்தை என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லை. நிச்சயம் சிரிப்பில்லை அது. ஆனால் வெறுப்புமில்லை. அதைத் தாண்டிய வேறொன்று இருந்தது அதில். என்ன அது? ரன்வேயில்கூட துரத்தியது அதன் அர்த்தம்?

விமானத்தில் ஏறி அமர்ந்தவுடன் அந்தக் காகிதத்தை விரித்துப் பார்த்தேன். தேத்தூமில் எழுதப்பட்ட ஒற்றை வரி இருந்தது.

'மலையிலிருந்து யாரையும் பசியோடு கீழிறங்க நாங்கள் அனுமதிப்பதில்லை.'

■

# தாச்சியாலை நழுவி அடுப்புக்குள்ளையே விழுகிறது?



**கதிரேசன் காத்தவராயன்**

மே-18 எனக்கு வீட்டுக்காவல். அங்கனை இஞ்சனை போய் இதையதைக் கதைச்சுப்போடுவன் எண்டிறதாலைதானாம். அடுத்த நாள் மாஸ்ரர் வீட்டுப்பக்கம் போனன். மாஸ்ரர் பேப்பருகளோடை இருந்தார். சுதனும் அவன்ரை கூட்டாளியொருத்தனும் இருந்து கதைச்சுக்கொண்டிருந்தாங்கள். சுதன் கண்டிட்டு வாங்கோ எண்ட குரலுக்கு மாஸ்ரர் பேப்பருகளை வைச்சுப்போட்டு இருங்கோ எண்டு இருக்கப்பண்ணினார்.

"என்ன மாமா புதினங்கள்?" எண்டு சுதன் தொடங்கினான். "என்னடாப்பா புதினம்? தாச்சியாலை நழுவி அடுப்புக்குள்ள விழுந்த கதை தான்போலை?" எண்டு நான் சொல்லிக்கொண்டிருக்க தம்பரும் முருகேசரும் வந்தினம். "என்ன மாஸ்ரர் கதிரேசர் பழமொழியோடை" இருக்கிறார் எண்டுகொண்டு முருகேசர் இருந்து கொண்டார். சுதனோடை இருந்த பெடியன் "உண்மை தான் ஐயா... அதுதான் நிலைமை" எண்டதுக்கு "அது கனபேருக்கு விளங்குதில்லையே?" எண்டு அங்கலாச்சான் சுதன்.

"அதெண்டாச் சரி தான்... வருவாயத் தேடுறதெண்டால் கடன் வாங்கிறதுதான் வழியெண்டல்லே கதை போகுது?" எண்டு முருகேசர் நிப்பாட்ட, "காசை அச்சடிக்கலாமெண்ட நிலைப்பாடு மல்லே இருக்குது" சுதன் முடிச்சான். மாஸ்ரர் பிலத்தாச் சிரிக்க தம்பர் தலையைச் சொறிஞ்சார். "எடேயப்பா தம்பு... படுகிற கஸ்டங்களை மறக்கிறதுக்கு அவங்கடை செய்தியளைப் படிச்சாலேகாணும்போலை..." எண்டு மாஸ்ரர் பிறகும் சிரிச்சார்.

"பாலிமென்றுகாறற்ரை கதையள் வடிவேலுவின்ரை கட்டங்கள் மாதிரியல்லே போகுது... உண்மைதான் நீங்கள் சொன்னது" எண்டார் உற்சாகமாய் தம்பர். "எங்கடை கோயில் நிர்வாகம் மாதிரியல்லே கிடக்குது... கண்மண் தெரியாமல் சிலவழிச்சாங்கள்.. தலைவரின்ரை வீட்டு வேலையள் முடிஞ்சுது.. பொருளாளர் கார் வாங்கிப்போட்டார்..." எண்டு நான் சொல்ல "நிர்வாகக்காறர்தான் பாவங்கள்" எண்டார் தம்பர்.

"எட தம்பா அவங்களும் மதிலாவத கட்டிப்போட்டாங்களல்லே.. ஒண்டு ரண்டு அப்பாவியளும் உதுக்குள்ளை அம்பிட்டு நல்லாய் நொந்து போட்டுதுகள்.... சாமானுகள் வாங்கின கடைக்காறர் துரத்த வெளிக்கிடத்தான் கணக்குப் பாத்தினம். சேர்த்த காசைவிட ஏழெட்டு மடங்காமல்லே கடன் காசு?" எண்டு முருகேசர் நிப்பாட்ட மாஸ்ரர் சிரிச்சார். "எங்கடை கோயிலின்ரை கதையையே மாதிரித்தான் நாட்டு நிலையும்" எண்டார் சிரிப்போடை.

"அவர்தான் பொருத்தமானவர் எண்டு தலையிலை சுமக்காதகுறையாக் கொண்டந்தவற்றை வேலியைக் கொழுத்தினதும்... ஒண்டுக்கும் உதவாதெண்டு கொமிற்றிக்குத் தெரிவு செய்யாதது கடனைத் தீர்க்கிறனெண்டு வந்துநிக்கிறதும்... சரியாய் கிடக்குது என்ன?" எண்டான் சுதன். அவன்ரை கூட்டாளி தலையைப் பலமா ஆட்டினான்.

"ஏற்கனவே பட்ட கடனுகளை அடைக்கவே வழியில்லை இப்ப புதுக்கடனுகள்... கடனை அடைக்கிறதெண்டால் அதுக்கும் கடன்படுகிறதே வழி?" எண்டு முருகேசர் கேட்க, "ஓமோம்... புதுப் புது ஆக்களிட்டை கழுத்தைக் குடுக்கிறதுதான் நடக்குது... பங்களாதேசிட்டையே கடன் கேட்கிற நிலைமையல்லே..." எண்டான் சுதனின்ரை கூட்டாளி.

"உதுகள் ஒரு பக்கம், காசை அச்சடிக்கிறது மல்லே நடக்குது... கொரோனாவுக்கை இரகசியமாய் நடந்த விசயம் இப்ப வெளிப்படையாய் நடக்குது... இது சரியான ஆபத்தான வேலை..." எண்டு சுதன் சொல்ல, "எப்பிடி யெண் டாலும் கையிலை காசு பிளங்கினாச் சரியல்லே" எண்டார் தம்பர். "பேயா! உது எதிர்காலத்திலை காசின்ரை பெறுமதியையல்லே இல்லாமலாக்கிப் போகிடும்" எண்டார் முருகே சர்.

"தம்பண்ணை மட்டுமில்லை, படிச்சனாங்கள் பிள்ளையளின்ரை வாழ்க்கைதான் எங்கடை வாழ்க்கை எண்டு புழுகித்திரிய ஆக்களின்ரை விளக்கமும் உதாயல்லே கிடக்குது" எண்டான் சுதன். "எடப்பா இதுகளும் இல்லையெண்டா விசரல்லே பிடிச்சிடும்... மைனா கோ கம இப்ப நோ டீல் கம அடுத்தது என்னவெண்டு கண்டு பிடிக்கவேணும்... நல்ல பேராய் யோசிக்க வேணும் நான் யோசிச்சுச் சொல்லுறன்" எண்டுகொண்டு வீட்டை வந்திட்டன்.

# 72 நாள்களில் உலகைச் சுற்றிய பெண்

**திலகா**

80 நாட்களில் உலகப் பயணம் (Around the World in 80 Days) என்ற சாகச நாவலை பிரெஞ்சு எழுத்தாளர் ஜூல்ஸ் வெர்ன் 1873இல் வெளியிட்டார். அந்த நாவலின் நாயகன் பிலியாஸ் ஃபோக் உலகைச் சுற்றியதைப் போன்றே தானும் செய்து பார்த்துவிட முடிவெடுத்தார் 25 வயதேயான நெல்லி ப்ளை. அப்போது வான் வழிப் போக்குவரத்து இல்லை.

* உலகின் முதல் புலனாய்வுப் பத்திரிகையாளர் என்ற சிறப்பைப் பெற்றிருந்த நெல்லி ப்ளைக்கு ஏதாவது புதிதாகச் செய்யவேண்டும் என்ற எண்ணம் இருந்தது. 1888இல் தான் பணியாற்றிய 'நியூயார்க் வேர்ல்ட்' பத்திரிகையில், 80 நாட்களுக்குள் உலகத்தைச் சுற்றி வந்து, அந்த அனுபவத்தை எழுதுகிறேன் என்று கேட்டார். அவர் பெண் என்பதாலும் ஆங்கிலம் மட்டுமே அறிந்தவர் என்பதாலும் நெல்லி ப்ளையின் கோரிக்கையை நிராகரித்தார் அதன் ஆசிரியர்.


* 1889இல் பத்திரிகையின் விற்பனையைக் கருத்தில்கொண்டு, உலகப் பயணம் மேற்கொள்ளும் திட்டத்தைக் கையிலெடுத்தது 'நியூயார்க் வேர்ல்ட்'. அப்போதும் ஒரு பெண்ணை அனுப்புவதில் பலருக்கும் விருப்பம் இல்லை. "ஆணால் முடியும் என்றால் நிச்சயம் பெண்ணாலும் முடியும். வேறு பத்திரிகையிலிருந்து ஒரு ஆணை அனுப்புங்கள். நான் அவரைவிட ஒருநாள் முன்பாக வந்து காட்டுகிறேன்' என்று சவால்விட்டார் நெல்லி. இறுதியில் அந்த வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

* மிகச் சிறிய பை ஒன்றில் ஃப்ளாஸ்க், ஒரு கோப்பை, தலையில் கட்டும் துணி, உள்ளாடைகள், சில கைக்குட்டைகள், ஒரு ஜோடி செருப்பு, ஊசி, நூல், பேனா, நோட்டு போன்றவற்றை எடுத்துக்கொண்டார்.

* 1889 கார்த்திகை 24 அன்று அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க உலக பயணம் தொடங்கியது. மக்கள் ஆரவாரத்துடன் வழியனுப்பி வைத்தனர். 75 நாட்களில் பயணத்தை முடிக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டார் நெல்லி ப்ளை.

* முதல் முறை கப்பலில் செல்வ






தால் நெல்லிக்குக் குமட்டலும் வாந்தியும் அதிகமாக இருந்தது.

* இந்தப் பயணத்துக்குக் காரணமான எழுத்தாளர் ஜூல்ஸ் வெர்னை பிரான்ஸில் சந்தித்து, வாழ்த்தைப் பெற்றுக்கொண்டார் நெல்லி ப்ளை.

* கப்பல், ரயில், கார் போன்ற பல்வேறு வாகனங்களில் பயணத்தை மேற்கொண்டார்.

* 'காஸ்மோபோலிடன்' என்ற பத்திரிகை எலிசபெத் பிஸ்லாண்ட் என்ற பெண் எழுத்தாளரை, நெல்லிக்குப் போட்டியாக எதிர்த் திசையில் உலகத்தைச் சுற்றிவர அனுப்பியிருந்தது.

* தனக்குப் போட்டியாக எலிசபெத் பிஸ்லாண்ட் கிளம்பியிருப்பது நெல்லிக்குத் தெரியாது. ஹாங்காங்



# 59

ஐயங்கொண்டான் சுவாமிகள்

# எமையறிதல்

பெயரை அடைதல் என்பது சடங்குவழிப்பட்ட ஒன்றல்ல என்பதை உணர்ந்தால், ஏற்றுக் கொண்டால் யாருக்கும் பிரச்சினையில்லை. பெயரை எதிர்பார்த்துச் செய்வது ஒரு செயலுக்கு அழகல்ல. எமக்கான நற்பெயர் என்பது செய்த வேலையினது நிலைபேறான பெறுதியால் சுட்டப்படவேண்டும். நற்பெயரைப் பெறவேண்டும் என்பதுகூட ஒரு ஆசைதான். தவிர்க்கப்பட வேண்டியது.

நற்பெயரைப் பெறவேண்டும் என்கிற ஆசையினால் பீடிக்கப்பட்ட ஒருவர் அலையவேண்டி ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடுகிறது. ஏன் அலைய வேண்டியேற்படுகிறது? என்பது தொடர்பாகப் பார்க்கவேண்டியே உள்ளது. ஆனால் நாம் அதற்காக நேரமொதுக்குவதில்லை. அல்லது முயற்சிப்பதில்லை என்பதுதான் யதார்த்தமானது.

பெயர் பெறுதல், பேரெடுத்தல் போன்ற சொற்கள் வழியாக அடையாளப்படுத்தப்படுமிது புகழ் விரும்புதல் என்கிற ஒன்றே. பெயர் பெறுதல் என்கிற ஒன்றுமற்ற ஒன்றுக்காக என்னவோவெல்லாம் செய்ய முயல்கிறோம். இந்தப் பெயர் என்பது பெறுமதியற்றதா? அதை ஏன் ஒன்றுமற்ற ஒன்று என்று குறிப்பிடவேண்டியுள்ளது? பெயர் என்பது ஒரு குறி. ஒருவனை இன்னொருவனிலிருந்து வேறுபடுத்த உதவுகிறது. ஒரு வனைச் குறித்துக்காட்ட உதவுகிறது. ஆதைத்தான் பிறப்பின் போதே பெற்றோர் குறித்துப் பதிவாக்கி சட்ட வலுச் சேர்த்ர்தும் விடு கிறார்களே? நாம் அதற்கு ஏன் அலைய வேண்டும்?

சாதனை என்றும் சேவை என்றும் உயர்ச்சி என்றும் பெயரெடுப்பதற்காக நாமெடுக்கின்ற முயற்சிகளுக்குப் பெயர் சூட்டியிருக்கிறோம். நாம் எண்ணித் திட்டமிட்டு ஆற்றுகின்ற உழைப்பு அல்லது வேலை இலக்கையடைந்து கொண்டால் அது நேரான பெறுதிகளைத் தந்திருந்தால் (இங்கு எனக்கு நேரானபெறுதி இன்னொருவனுக்கு எதிரானபெறுதியாக இருக்க முடியும் என்கிற உண்மையை மறைத்துக் கொள்ளவேண்டியுள்ளது. பிறரால் அத்தகைய பெறுதி எட்டப்படுவது இயலாதெனக் கருதுகிறபோது அது சாதனை எனப்படுகிறது. இது ஏற்புடையதுதானா?

இதனைத்தான் முதல் பகுதிகளில் பார்த்திருக்கிறோம். நான் செய்தேன், நானே செய்தேன், என்னாலேயே ஆனது, என்னால் மட்டுமே முடியும் போன்ற கருத்துக்களைப் பயன்படுத்துதல் என்பதானது எனக்கொரு பெயரை நானே முன்மொழிகிற ஒரு செயலேதான். இங்கு செய்த வேலைக்கு எடுத்துக்கொண்ட வளங்களை விடவும் (உடலுழைப்பு, மூளையுழைப்பு, நேர - பண செலவீடுகள், பெறப்பட்ட உதவிகள்- அதனைச் செய்தோரது உழைப்பு போன்றன) அதிகமாக அதனை (வேலையை) முன்னிலைப் படுத்துவதற்காக அதிகமாக அக்கறைப்படுகிறோம்.

இதன்போதுதான் நாம் பல விடயங்களை மறைக்கவும் பல விடயங்களை உருவகிக்கவும் வேண்டியதொரு நிலை தவிர்க்க முடியாதபடி உருவாகிக்கொள்கிறது. இது நாம் பிறரை விலக்கவும் அவர்களாகவே விலகவும் வேண்டியதொரு இக்கட்டான சூழலை உண்டாக்கிவிடுகிறது என்பதை உடனடியாக நாம் உணர்ந்துகொள்வது மிகக்குறைவு அல்லது இல்லை. இதுதான் யதார்த்தமாக உள்ளது. இந்த நிலையில் மறுபுறமாக நான் ஒதுக்கப்படுகிறேன் என்கிறதொரு உறுத்தலானது மனதுள் எழத்தொடங்குகிறது. மனம் சஞ்சலப்படத் தொடங்க தூக்கம் விலகிப் போகிறது.

பிறரை ஒதுக்கல் ஒதுங்கச்செய்தல் போன்றவற்றினது பெறுதியாக கிடைக்கும் மேற்படி உறுத்தலாலெழுகிற குற்றவுணர்ச்சி (வெளிப்படையாக அல்லது உள்ளுணர்வாக அல்லது கற்பனையாக) ஒதுங்கச் செய்துவிடுகிறது. இது உடனடியானதாகவோ அல்லது காலங்கடந்த நிலையிலோ ஏற்பட்டேயாகிறது என்பது பட்டறிவு ரீதியாக கண்ட உண்மை என்பதையாவது ஏற்றுக்கொள்ள முடிகிறதா? இல்லை.

இவ்வாறான நிலையில் சாதனையைச் செய்தல் என்பதன் பெறுதி என்ன? விசுவாசமாக பொறுப்புணர்வோடு தன்னை வருத்திச் செய்கின்ற வேலையினது பெறுதியை அனுபவித்தவர்கள் தருகின்ற பெயர் உண்மையானதாக இருக்கமுடியும். அலைந்து நானே எனது வேலையை, அதன் பெறுதியை புகழ்ந்துவிளம்பரம் செய்து பெறுவது உண்மையாகாது. அது உசுப்பேத்தலாக அல்லது அந்தநேரம் தப்பித்துக்கொண்டு நழுவுவதற்கான உத்தியாக மட்டுமே இருக்கமுடியும். இவ்வாறான நிலையை உணரும்போது பட்ட பெருமையெல்லாம் குற்றவுணர்வாக அல்லது தாழ்வுணர்வாக உறுத்தத் தொடங்கும். தூக்கம் தொலையும். தப்பலாமா? சிந்திப்போம்.

## 72 நாள்களில்...

கில் அவர் இறங்கியபோது, 'நீங்கள்தான் நெல்லி ப்ளையா? நீங்கள் போட்டியில் மிகவும் பின்தங்கிவிட்டீர்கள். உங்கள் போட்டியாளர் மூன்று நாட்களுக்கு முன்பே இங்கு வந்து, கிளம்பிவிட்டார்' என்றார் ஒருவர்.

* 'நான் போட்டிக்காக வரவில்லை. யாருடனும் போட்டியில் இல்லை. நான் 75 நாட்களில் நிச்சயம் பயணத்தை முடித்துவிடுவேன். ஏற்கெனவே 60 நாட்களைக் கடந்துவிட்டேன்' என்று நம்பிக்கையோடு சொன்னார் நெல்லி.

* அனைத்து விஷயங்களையும் குறிப்பெடுத்துக்கொண்டார். ஆங்காங்கே தனது அனுபவங்களை எழுதி, பத்திரிகைக்கு அனுப்பிவைத்தார். ஒவ்வொரு தகவலும் பொதுமக்களின் எதிர்பார்ப்பைக் கூட்டும் விதத்தில் செய்தியாக வெளியிடப்பட்டது. மக்கள் நெல்லி வரும் நாளை ஆவலுடன் எதிர்நோக்கியிருந்தனர்.

* நெல்லி தன் பயணத்தை முடித்துக்கொண்டு அமெரிக்காவில் கால் பதித்தார். மக்கள் ஆரவாரத்துடன் வரவேற்றனர். 1890 தை 25 அன்று இறங்கிய நெல்லி, 72 நாட்கள், 6 மணி நேரத்தில் உலகத்தை வெற்றிகரமாகச் சுற்றிவந்திருக்கிறார் என்று அறிவிக்கப்பட்டது. ஜூல்ஸ் வெர்ன் கதையின் நாயகனைவிட எட்டு நாட்கள் முன்னதாக உலகத்தைச் சுற்றி வந்துவிட்டார் நெல்லி!

* நான்கு நாட்களுக்குப் பிறகு உலகப் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு வந்து சேர்ந்தார் எலிசபெத் பிஸ்லாண்ட்.

* எலிசபெத் கோச்சரன் என்ற இயற்பெயர் கொண்ட நெல்லி, 19 வயதிலேயே வித்தியாசமான பத்திரிகையாளராகத் திகழ்ந்தார்.

* பெண் தொழிலாளர்களின் பிரச்சினைகள், விவாகரத்து சட்டத்தில் மாற்றம் போன்றவற்றை எழுதினார். மனநலக் காப்பகத்தில் 10 நாட்கள் தங்கி, புலனாய்வு செய்து அவர் எழுதிய கட்டுரை, ‘உலகின் முதல் புலனாய்வுப் பத்திரிகையாளர்’ என்ற பெயரைப் பெற்றுத்தந்தது.

* ‘72 நாட்களில் உலகப் பயணம்’ என்ற தனது புத்தகத்தால் பெரும் புகழ்பெற்றார். திருமணத்துக்குப் பிறகு வெற்றிகரமான தொழிலதிபராக விளங்கினார். அப்போது பால் கேன், பால் பீப்பாய்களின் வடிவமைப்பை மாற்றியமைத்து, அந்தக் கண்டுபிடிப்புக்கான காப்புரிமையும் பெற்றார்.

* முதல் உலகப் போர் நடைபெற்றபோது செர்பியாவுக்கும் ஆஸ்திரியாவுக்கும் இடையிலுள்ள போர்ப் பகுதிக்குச் சென்று எழுதிய முதல் பெண்ணும் முதல் வெளிநாட்டவரும் இவரே. 1913ஆம் ஆண்டு வாக்குரிமை கேட்டு பெண்கள் நடத்திய போராட்டம் குறித்து இவர் எழுதிய கட்டுரை, அமெரிக்காவில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்குவதற்கு முக்கியக் காரணமாக அமைந்தது.

* இன்று நெல்லி ப்ளையின் 158வது பிறந்தநாள்.



சிந்தாமணி

# மின்குமிழ் இரகசியம்...!

தோமஸ் அல்வா எடிசனின் கண்டுபிடிப்புத்தான் மின்சாரத்தில் ஒளிரும் மின் விளக்குகள். தொடக்கத்தில் இந்த மின் விளக்குகள் குமிழ் வடிவில்தான் இருந்தன. எடிசன் கண்டுபிடித்த போதும் பின்னர் சிலகாலம் வரையும் குமிழ் வடிவில் தொடர்ந்ததால் இவற்றுக்கு மின்குமிழ் என்கிற பெயர் நிலைத்தது. ஆனால், இன்றைக்குக் குமிழ் வடிவுக்கு அப்பால் பல்வேறுபட்ட வடிவங்களில் பல்வேறுபட்ட அளவுகளில் பல்வேறுபட்ட ஒளிச் சேர்க்கைகளில் இந்த மின்விளக்குகள் கண்டு பிடிக்கப்பட்டுவிட்டன. நம் நாட்டில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தற்காலத்தில் மின்சாரத்தைச் சேமித்து வைத்து ஒளிரவல்ல மின்விளக்குகளுக்கு ஏற்பட்டுள்ள மவுசு தனிக் கதை. ஆனால் மின்குமிழில் தொடங்கி இற்றைக்குப் பல்வேறு வடிவங்களில் விற்பனையாகத் தொடங்கியிருக்கிற இந்த மின் விளக்குகளுக்குப் பின்னால் நீளமான - சுவாரசியமான பல மறைக்கப்பட்ட கதைகள் இருக்கின்றன என்று பலருக்குத் தெரியாது.


**எடிசன் கால மின்குமிழ்**

பிறிதெரு தேவைக்காகப் பிறிதொரு நபருக்கு நுண்ணுனர் மானி எனும் கருவியைச் செய்து கொடுத்த தோமஸ் அல்வா எடிசன் அந்தக் கருவி மூலம் கம்பியில் ஓடும் மின்னோட்டத்தைக் கட்டுப்படுத்தலாம் என்று கண்டறிகிறார். அந்த முறையைப் பயன்படுத்தி மின்சார விளக்கு ஒன்றைத் தயாரிக்கவும் முடியும் என்கிற முடிவில் மின் விளக்குத் தயாரிப்பில் இறங்குகிறார். பிளாட்டின உலோகக் கம்பிச் சுருளை வெற்றிடக் குமிழி ஒன்றில் புகுத்திக் கட்டுப்படுத்திய மின்னோட்டத்தில் ஒளிர வைத்து, முதல் மின்விளக்கை உருவாக்கினார். அந்தத் தொழில்நுட்பத்திலான மின்குமிழ்கள் 1881ஆம் ஆண்டு தை மாதத்தில் சந்தைக்கு விடப்பட்டது. அடுத்த ஆண்டில் மின்விளக்கு அமைப்பு வளர்ச்சி அடைந்து, உணவு விடுதிகள், அரங்க மேடைகள், வாணிபத் துறைகள், கடைகள், வீதிகள் என அனைத்து இடங்களிலும் மின்குமிழ் ஒளி வீசத் தொடங்கியது. அதை ஆக்கிய எடிசனின் புகழ் உலகெங்கும் பரவியது. ஆனால் அதே வேகத்தில் அந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியும் அதை மெருகூட்டியும் மின்குமிழ்களைத் தயாரிக்கும் நிறுவனங்கள் பல முளைத்தன. மின்குமிழ்கள் குவிந்தன. உலகம் இருளில் மூழ்காமல் தொடர்ந்தும் ஒளிர்ந்தது. சூரியன் மறைந்துவிட்ட குறை தெரியாது போயிற்று.

> மின்விளக்கு அமைப்பு வளர்ச்சி அடைந்து, உணவு விடுதிகள், அரங்க மேடைகள், வாணிபத் துறைகள், கடைகள், வீதிகள் என அனைத்து இடங்களிலும் மின்குமிழ் ஒளி வீசத் தொடங்கியது. அதை ஆக்கிய எடிசனின் புகழ் உலகெங்கும் பரவியது.

**மின்குமிழ்களில் குறைகள்**

மின் குமிழ்களைக் கண்டு மக்கள் வியந்தனர். இரவில் ஒளிரும் அதைச் சொந்தமாக்க முண்டியடித்தனர். விற்பனைக்காக அதிக மின்குமிழ்களைத் தயாரிக்க வேண்டிய நிலை நிறுவனங்களுக்கு ஏற்பட்டதும் அதிக லாபத்தைச் சம்பாதிக்க வேண்டும் என்கிற யோசனையும் கூடவே ஏற்பட்டது. அதிக காலம் வரை நின்று நீடித்து ஒளிரும் மின்குமிழ்களைச் சந்தைக்கு விட்டால் தொடர்ந்து மின்குமிழ்களை மக்கள் தேடாது போகத் தமக்கான தேவையும் இல்லாதுபோய் வருமானமும் இல்லாதுபோகும் என்று எண்ணிய நிறுவனங்கள் மின்குமிழ்களில் குறைகளைப் புகுத்தத் தொடங்கின. நீண்ட காலம் பாயன்கொடுக்கும் திறனிருந்தாலும் அதைக் கட்டுப்படுத்தும் நுட்பத்தைப் புகுத்தி மின்குமிழ்களின் ஆயுட்காலத்தைக் குறைக்கும் திட்டத்தைக் கூட்டுச்சேர்ந்து உருவாக்கின. இதனால் மின் குமிழ்களின் தரம் குன்றின.



**வளர்ச்சியும் மாற்றமும்**

1920ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மஞ்சள் ஒளியைத் தரும் மின்குமிழ்களே பயன்பாட்டில் இருந்தன. இவற்றின் ஆயட்காலம் 2 ஆயிரம் தொடங்கி 2 ஆயிரத்து 500 மணி நேர ஒளிர்வுத் திறனாக இருந்தது. தொடக்ககால மின்குமிழ்களின் பாவனைக் காலத்தை மட்டுப்படுத்துவதற்காக மின்குமிழ் தயாரிப்பு நிறுவனங்கள் 1925ஆம் ஆண்டில் ஒன்றிணைந்து மின்குமிழ்களின் உற்பத்தி மற்றும் விற்பனையைக் கட்டுப்படுத்தும் விதத்தில் அவற்றின் ஆயுளைக் குறைத்தன. இதனால் மின்குமிழ்களின் ஆயட்காலம் ஆயிரம் மணிநேரமாக்கப்பட்டது. இந்த நிறுவனத்துக்குப் பெயர் phoebus ins. industrial company for the development of lighting என்பதாகும். இதன் பின்னரான அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியால் மின்குமிழ்களைவிடச் சிறந்த மின்விளக்குகள் கண்டுபிடிக்கப்பட்டன. மஞ்சள் ஒளியை விடுத்து வெள்ளொளி பிரபலமானது. சுருள்




வடிவ விளக்குகள், குழாய் வடிவ விளக்குகள், விரும்பிய வடிவத்தில் விளக்குகள் என மின் விளக்குளின் வடிவங்கள் மாறின. அவற்றின் பாவனைத் திறனும் முன்னைய மின்குமிழ்களை விட அதிகம். ஆனால் அவை மின்குமிழ்களைவிட அதிக மணிநேரத்தில் ஒளிரும் தற்போதைய திறன்தான் உண்மையா, அல்லது மின்குமிழ்களைப்போல இவற்றின் திறனையும் கட்டுப்படுத்தித்தான் நிறுவனங்கள் பயன்பாட்டுக்கு விடுகின்றனவா என்பது அந்த நிறுவனங்களுக்கே வெளிச்சம்...! மின்குமிழ்களின் வளர்ச்சி மற்றும் மாற்றங்கள் பல மேம்படுத்தல்களைக் கண்ட போதும் இந்தக் குறை தொடர்கிறதா என்கிற கேள்வி நீடிக்கவே செய்கிறது. ■

நட்சத்திரா

# ஏன்...? அப்படி...?

19



## தனியன் பன்றிக்குப் பலம் அதிகம்

காட்டுப் பன்றிகள் கூட்டமாக அங்குமிங்கும் திரிந்து பயிர்களை அழிப்பது, வேளாண்மைகளுக்குப் பங்கம் விளைவிப்பது என எல்லாமே மிகச் சாதாரணமாக நடக்கின்றன. பன்றிக் கூட்டமானது வயல்களுக்குள் புகுந்துவிட்டால் உழவு இயந்திரம் உழவு செய்வதுபோல மண்ணைக் கிண்டிப் புரட்டிவிடும். இவ்வாறு அவை மண்ணைப் புரட்டுவதற்குக் காரணம் மண்ணிலுள்ள கோரைக் கிழங்குகள், வேறு வகையான கிழங்கு வகைகளை உண்பதற்காகவே. பன்றிகள் இவ்வாறு மண்ணைக் கிளறிச் சென்ற பின்னர் பன்றி கிண்டிய அந்த மண்ணை வைத்து இந்தப் பன்றிக் கூட்டத்தில் தனியன் பன்றி ஒன்று இருக்கிறது என்பதை நல்ல அனுபவமுள்ள ஒருசிலர் கண்டுபிடிக்கிறார்கள்.

பன்றிக் கூட்டம் கிண்டி எறிகிற இடம் ஆழமாகவும் பெரிய பெரிய மண் கட்டிகளாகவும் காணப்படும். அதைப் பார்த்து அதில் தனியன் பன்றியும் இருக்கிறது என்பதை அறிவது இலகுவானதல்ல.

தனியன் பன்றி என்பது தாய்ப் பன்றிக்கு முதலில் பிறப்பதில்லை. காட்டுப் பன்றி ஒன்று முதலில் 16 குட்டிகளை ஈனும். அதன் பின் 15,14 எனக் குறைந்து சென்று இறுதியில் தனிக் குட்டி ஒன்றை ஈனும். இறுதியாகப் பிறப்பது தான் தனியன் பன்றி. தனியே பிறப்பதால் அந்தக் குட்டி தாய்ப் பாலை அதிகம் குடிக்கும். சிறிய பன்றியாக இருக்கும்போதே கொழுத்த குட்டியாக இருக்கும். அதன் தொடர்ச்சியான வளர்ச்சியாலும் அது வயதுக்கு மேலாக அதிகம் பெருத்திருக்கும்.

இந்தப் பன்றிக்குப் பலமும் அதிகமாக இருக்கும். இலகுவில் யாரும் அதைக் கொன்றுவிட முடியாது. இந்தப் பன்றியின் பலமானது பல ஆபத்துகளில் இருந்து அது தப்பிக்கொள்ள வாய்ப்பளிக்கிறது. இவ்வாறான தனியன் பன்றியைக் கொல்வதில் வேட்டைக்காரர் ஆளுக்காள் போட்டி போடுவதுண்டு. அது கொழுத்த இறைச்சியைக் கொண்டிருப்பதே அதற்குக் காரணம். இந்தத் தனியன் பன்றியை யார் தாக்க முயன்றாலும் தாக்குபவரை நேரடியாக ஓடி வந்து அது தாக்க முயலும். இதனால் இந்தப் பன்றியைத் துப்பாக்கியால் சுடுபவர்கூட ஒரு பெரிய மரத்தையோ, பாறையையோ மறைவிடமாக வைத்துக்கொண்டே சுடுவர். நேரடியாக நின்று தாக்கினால் அது தாக்கியவரை நோக்கி மூர்க்கத்தனமாக ஓடிவரும். தாக்கியவரின் கால் தொடைப் பகுதியைத் தனது பெரும் பற்களால் குத்தி எறியும். அந்த வகையில் தனியன் பன்றிக்கு ஒரு சிறப்பான இடமுண்டு. தாயின் தனிக்குட்டி என்பதால்தான் அதற்குப் பலமும் அதிகம்.

# முதியோர் பராமரிப்பின் அவசியம்!

**சிவபாலன் இளங்கோவன்**



கனடாவில் இருக்கும் நண்பர் ஒருவர் அழைப்பெடுத்தார். முதியவர்களைப் பராமரிப்பதற்கு யாராவது ஆட்களைப் பிடித்துத் தரமுடியுமா என்று கேட்டார். அவருடைய தம்பி மற்றும் தங்கை ஒருவர் இங்கேயே இருக்கிறார்கள். அவரின் பெற்றோரும் இப்போதுதான் 60களை எட்டியிருக்கிறார்கள். அதனால் அவர் ஏன் முதியோர் பராமரிப்புக்கு ஆள்தேடுகிறார் என்று நினைத்தேன். தனக்கில்லை தனது நண்பர் ஒருவரின் தாயாரைப் பராமரிக்க வேண்டியிருக்கிறது என்றார். நான் விசாரித்துச் சொல்கின்றேன் என்று சொன்னேன். நான் விசாரித்தவரையில் முதியோரைப் பராமரிப்பதற்கென்று மாதம் ஒன்றுக்ககு 35 முதல் 45 ஆயிரம் வரை கேட்டார்கள். நண்பனிடம் அதனைத் தெரிவித்தேன். பின்னர் அது பற்றி மறந்தேபோனேன். ஒரு நாள் பேச்சு வாக்கில் நண்பனிடம் அது பற்றிக் கேட்டேன். அந்த முதிய தாயை தனியார் பராமரிப்பு இல்லம் ஒன்றில் சேர்த்துவிட்டார்கள் என்றார். எனக்கு அது அதிர்ச்சியாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது. காரணம், நண்பன் சொன்ன விளக்கம்.

"அந்த அம்மா பிள்ளைகளோடு இருக்கத்தான் விரும்புகிறார். ஆனால் அவரை வெளிநாட்டுக்கு அழைத்து வைத்திருக்க முடியாது என்று அவர் பிள்ளைகள் நினைக்கிறார்கள். தனது கடைசிக் காலம் வரையில் தனது வீட்டிலாவது இருக்கவேண்டும் என்று அவர் விரும்புகிறார், ஆனால் அவரைப் பார்ப்பதற்கு யாரும் இல்லை என்பதால் அந்த வீட்டை விற்று அந்தப் பணத்தை வங்கியில்போட்டு வரும் வட்டியில் தாயாரை முதியோர் பராமரிப்பு இல்லத்தில் சேர்த்துவிட்டார்கள்" என்றார் நண்பர்.

எனக்குத் தெரிந்து இது இரண்டாவு சம்பவம். இதற்கு முன்னர் பிரான்ஸில் இருக்கும் நண்பர் ஒருவர் வீட்டிலும் இது நடந்தது. அவர்கள் குடும்பமாக பிரான்ஸிற்கு சென்றுவிட்ட பிறகு. நண்பரின் மாமனார், அதாவது மனைவியின் அப்பாவும் நண்பரின் அப்பா அம்மாவுடனேயே ஒரு வாடகை வீட்டில் தங்கியிருந்தார். ஆனால் மாமனாருக்கு மறதி வருத்தம் தொடங்கியதுமே நண்பரின் அப்பாவும் அம்மாவும் அவரைத் தங்களால் தொடர்ந்து பராமரிப்பது இயலாத காரியம் என்று கைவிரித்துவிட்டார்கள். நண்பரின் மனைவி தனியாக யாழ்ப்பாணம் வந்து தனது அப்பாவை முதியோர் இல்லம் ஒன்றில் சேர்த்துவிட்டார். இறக்கும் வரை அந்த முதியோர் இல்லத்திலேயே அவர் வாழ்ந்தார்.

நள்ளிரவு ஒரு மணி இருக்கும்... தெரியாத எண்ணிலிருந்து என் கைபேசிக்கு அழைப்பு வந்தது. பெங்களூரு ரயில் நிலையத்திலிருந்து ரயில்வே ஊழியர் ஒருவர் கன்னடமும் தமிழும் சேர்ந்த மொழியில் சொன்னார் 'சார், யாருன்னே தெரியல, வயசான ஒருத்தர், எந்த அடையாளமும் இல்ல, பேசறது ஒண்ணும் புரியல, தனியா ஸ்டேஷன்ல அலைஞ்சிட்டு இருக்கார், கையில உங்க பிரிஸ்கிரிப்ஷன் மட்டும்தான் இருக்கு, அவங்க ஃபேமிலி மெம்பரோட நம்பர் இருந்தா கால் பண்ணிச் சொல்ல முடியுமா?'

வரும் காலத்தில் நாம் எதிர்நோக்கியிருக்கும் முக்கியமான பிரச்சினைகளுள் ஒன்றாக முதியோர் பராமரிப்பு இருக்கும். நவீன மருத்துவ முறைகளின் காரணமாக மனிதர்களின் வாழ்நாள் கூடியிருக்கிறது. அதன் விளைவாக, முதியோர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டிருக்கிறது.

ஆசியாவிலேயே முதியவர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து வரும் நாடு இலங்கை. மொத்தச் சனத்தொகையில் 16.3 சதவீதத்தினர் முதியவர்கள். கடந்த பொறுத்தவரை கடந்த 50 ஆண்டுகளில் 60 வயதைத் தாண்டிய முதியவர்களின் எண்ணிக்கை மடங்குகளில் அதிகரித்திருக்கிறது. 2050ஆம் ஆண்டளவில் 15 வயதுக்குக் கீழே உள்ள குழந்தைகளைவிட 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களின் எண்ணிக்கை நாட்டில் அதிகமாக இருக்கும்.

மூளைசாலிகள் வெளியேற்றம், உழைக்கும் இளையவர்களின் வெளியேற்றம் என்பன காரணமாக வடக்கு கிழக்கு முதியவர்களின் எண்ணிக்கையில் எதிர்காலத்தில் அதிகளவு சவால்களை எதிர்கொள்ளவேண்டியதாக இருக்கும். அச்சமூட்டும் கேள்வி.

பொதுவாகவே, 'தமிழர்கள் முதியவர்களைக் கொண்டாடும் இயல்பையுடையவர்கள். முதியவர்கள் எங்கள் முதுசங்கள் என்று சொல்லக்கூடியவர்கள். எமது குடும்பங்கள் முதியவர்களின் மீது மரியாதையையும் மதிப்பையும் கொண்டிருப்பவை' என்று நாம் காலம்காலமாக நம்பிக்கொண்டிருப்பவை எல்லாம் தவறானவை என சமீபத்திய ஆய்வுகள் சொல்கின்றன. முதியவர்களின் மீதான வன்முறைகளுக்கு எதிரான சர்வதேச அமைப்பு (International Network for Prevention of Elder Abuse [INPEA]) தனது 2016ஆம் ஆண்டு அறிக்கையில், முதியவர்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் மிக அதிகமாக நடக்கும் ஆசிய நாடுகளில் ஒன்றாக இலங்கையையும் பட்டியலிட்டிருக்கிறது. இந்தப் பட்டியிலில் இந்தியாவே முதலிடத்தில் இருக்கின்றது என்றாலும் நம் முன் உள்ள சவாலையும் இது வெளிப்படுத்தி நிற்கின்றது.

இன்றைய பொருளாதாரச் சூழலில் குடும்ப அமைப்பு என்பதே சுருங்கியிருக்கிறது. அதுவும் நகர்ப்புறக் குடும்பங்களின் பொருளாதாரச் சூழல் இன்னும் கடினமானது. அது முதியவர்களுக்கு அத்தனை இலகுவானதாகவும் இருப்பதில்லை. ஒரு கட்டாயத்தின் பேரில் முதியவர்களைப் பராமரிக்கும் பொறுப்புக்கு ஒரு குடும்பம் தள்ளப்படும்போது, பராமரிக்க நேரும் குடும்ப உறுப்பினர்கள் அந்த முதியவர்களைத் துன்புறுத்துவதன் வழியாகவே தங்களது மனவுளைச்சலைப் போக்கிக் கொள்கிறார்கள். குடும்ப அமைப்பில் ஏற்பட்டிருக்கும் இந்த மாற்றங்களும் நெருக்கடிகளுமே முதியவர்களின் மீதான வன்முறைகளுக்கு முக்கியக் காரணம்.

வன்முறை என்றால், அது வெறும் உடல் மீதான வன்முறை மட்டுமே அல்ல. சிறு அவமதிப்பும் கடும் சொல்லும் நிராகரிப்பும் அலட்சியமும், முதியவர்களுக்கு எதிரான சிறு உடல் அசைவுகளுமே கூட உளவியல் ரீதியாக அவர்களைப் பெரிதும் பாதிக்கின்றன. முதியவர்களை எல்லா வயதினரும் பெரும்பாலான நேரம் நுட்பமாகத் துன்புறுத்திக்கொண்டிருக்கிறார்கள். இந்த உளவியல் நெருக்கடிகள் முதியவர்களை மிக விரைவாகவே நோய்மையிலும் முதுமையிலும் தள்ளுகின்றன. அவர்கள் அங்கே தமது இறப்பை ஒரு விடுபடுதலாக எதிர்பார்க்கத் தொடங்கிவிடுகிறார்கள்.

முதியவர்கள் பராமரிப்பு தொடர்பாக நமக்கு நீண்ட காலப் பார்வை அவசியமானது. 'முதியவர்களைக் கைவிடும் குடும்பத்தினர் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள்' என்று உணர்ச்சிவசப்பட்டு அணுகாமல், இதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் என்ன, முதியவர்களைப் பராமரிப்பதில் ஒரு குடும்பம் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் என்ன என்பதையெல்லாம் தீவிரமாக ஆராய்ந்து, செயல்திட்டங்களை வகுக்க வேண்டிய பொறுப்பு சிவில் சமூகமாக நமக்கு இருக்கிறது. முதியோர் இல்லங்களைப் பெருக்கிக்கொண்டே செல்வதும் எல்லாக் கோயில்களுடனும் முதியயோர் இல்லங்களைச் சேர்த்துக்கொள்வதும் இதற்கான தீர்வாக ஒருபோதும் இருக்கப்போவதில்லை. கைதடியில் உள்ள அரச முதியோர் இல்லத்திற்குச் சென்று அவர்களுடன் ஒருநாள் பொழுதைக் கழித்துப் பார்த்தால் போதும் இதனைப் புரிந்துகொள்வதற்கு. முதியவர்கள் தமது குடும்பங்களுடன் இருப்பதே அவர்களுக்கு நம்மையளிக்கும்.

முதியவர்களைப் பராமரிப்பதில் குடும்பம் தன்னளவில் நிறைய மாற்றிக்கொள்ளவேண்டும், இளைய தலைமுறையினருக்கு முதுமை தொடர்பான புரிதல்களை ஏற்படுத்தவேண்டும். முதியவர்களுடன் குழந்தைகள் உரையாடுவதையும் அவர்களுக்கான சேவைகளை வழங்குவதையும் குடும்பம் உறுதிப்படுத்தவேண்டும். மேலும், முதியவர்களைக் கூட்டாகப் பராமரிக்கும் சமூகத்தை உருவாக்குவதைப் பற்றியும் அரசு தீவிரமாகப் பரிசீலிக்க வேண்டும். அதற்காக அரசு சாரா நிறுவனங்களையும் உள்ளடக்கித் திட்டங்களை உருவாக்க வேண்டும்.

வாழ்நாளை நீட்டிப்பதை மட்டுமல்லாமல், நீடித்திருக்கும் வாழ்நாளில் மனநலத்தையும் மேம்படுத்த வேண்டியது நவீன அறிவியலின் பொறுப்பு. அதனால் ஒரு தரமான, நிம்மதியான, மகிழ்ச்சியான வாழ்க்கையை முதியவர்களுக்குக் கிடைக்கச் செய்வதற்கான முயற்சிகளை நாம் இப்போதிருந்தே எடுக்கவேண்டும். ■

# புழு




## மம்முட்டியின் கோரத்தாண்டவம்!

அறிவியலின் படி, பிறப்பின் அடிப்படையில் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என எவரும் இருக்க முடியாது. இந்த உண்மையைப் புரிந்துகொள்வது மிகவும் எளிது. அதை முழுமனத்துடன் ஏற்றுக்கொள்வதில்தான் மனிதர்களுக்குச் சிக்கல் இருக்கிறது. ஏனென்றால், ஆதிக்க மனோபாவத்தை இயல்பாகக் கொண்டிருக்கும் மனிதர்களின் வாழ்வை இந்த எளிய உண்மை அர்த்தமற்றதாக்கி விடும். குலப் பெருமை, சாதிப் பெருமை, இனப் பெருமை உள்ளிட்ட அனைத்து பெருமைகளையும் அது கேள்விக்குள்ளாக்கிவிடும். இந்த ஆபத்திலிருந்து தம்மைக் காப்பதற்கு மனிதர்கள் விரும்பி அணிந்திருக்கும் கவசமே 'உயர்வு - தாழ்வு' எனும் நம்பி க்கை.

அந்த நம்பிக்கையைக் குறிப்பிட்ட சிலர் மட்டும் ஏற்றுக்கொள்வதாலோ, நம்புவதாலோ எந்தப் பயனும் கிடைக்காது. அதை மற்றவர்களும் முழுமையாக நம்ப வேண்டும். கேள்விக்கு இடமின்றி ஏற்றுக்கொள்ள வேண்டும். அதுவே அந்தக் குறிப்பிட்ட சிலரின் இருப்பை உறுதிசெய்யும். அவர்கள் நிறுவ விரும்பும் உயர்வையும் நிலைநிறுத்தும். இந்த நம்பிக் கையை உண்மையாக வலிந்து திணிக்க ஆதிக்க மனோபாவம் கொண்ட மனிதர்கள் ஆடும் ஆட்டம் மிகவும் கோரமானது. வன்மமும் மூர்க்கமும் நிறைந்த இந்தக் கோர ஆட்டத்தின் சிறுதுளியே, 'புழு' எனும் மலையாளத் திரைப்படம். மம்முட்டி நடிப்பில், ரதீனா எனும் பெண் இயக்கத்தில் உருவாகி இருக்கும் இந்தத் திரைப்படம், சோனி லிவ் ஒடிடி தளத்தில் தற்போது வெளியாகி இருக்கிறது.

**மகாபாரதத்தின் கிளைக் கதை**

இந்தக் கதையின் மூலம் மகாபாரதத்தின் ஒரு கிளைக் கதையிலிருந்து எடுக்கப்பட்டு இருக்கிறது. அந்தக் கதையின் படி, மகாபாரதத்தில் தர்மருக்குப் பின்னர் அஸ்தினாபுரத்தை ஆட்சி செய்தவர் பரீக்ஷித்து. ஒருமுறை வேட்டைக்குச் சென்றபோது, அங்கே தவத்தில் ஆழ்ந்திருந்த சமீக முனிவரை அவர் காண்பார். அவர் உண்மையில் தவத்தில்தான் இருக்கிறாரா என்பதைக் கண்டறிய, உயிரற்ற பாம்பு ஒன்றை எடுத்து முனிவரின் கழுத்தில் மாலையாகப் போடுவார். அப்போதும் முனிவரின் தவம் கலையாததால், பரீக்ஷித்து அங்கிருந்து சென்றுவிடுவார். இதைக் கண்டு சினமுற்ற முனிவரின் மகன், கொடிய பாம்பிடம் கடிபட்டு இறப்பாய் என மன்னருக்குச் சாபமிடுவார். இந்த ஆபத்திலிருந்து தப்பிப்பதற்கு மன்னர் விண்ணில் கோட்டைக் கட்டி வாழ்வார். பாம்பிடமிருந்து ஆறு முறை தப்பிக்கும் மன்னர், இறுதியில் பழங்களின் ஊடே புழுவாக நுழைந்த பாம்பிடம் கடிபட்டு இறப்பார்.

இந்தப் படத்தில், குட்டன் எனும் கதாப்பத்திரத்தில் நடித்திருக்கும் மம்முட்டியே மன்னர் பரீக்ஷித்து. ஆனால், இந்த படத்தில் மம்முட்டி பல பாம்புகளைப் பல முனிவர்களுக்கு மாட்டியிருக்கிறார். எனவே, அவரைக் கொல்வதற்கும் பல பாம்புகள் துரத்துகின்றன. அவற்றிலிருந்து மம்முட்டி தப்பித்தாரா? என்கிற கேள்விக்கான விடையே இந்தத் திரைப்படம். அந்தப் பாம்புகளின் பின்னணி, அவற்றின் வன்மம், விஷத்தின் வடிவங்கள் ஆகியவற்றை சமகால அரசியல் சூழலுக்கேற்ற வகையில் இந்தக் கதையில் பொருத்தியது இயக்குநரின் சாதுரியம். இந்தச் சாதுரியமே இந்தப் படத்தின் பலம். அதுவே இதன் பலவீனமும் கூட.

**அப்புன்னி சசியின் தேர்ந்த நடிப்பு**

இந்தப் பலவீனத்தைப் புறந்தள்ளி நம்மைப் படத்தோடு ஒன்றிப்போகச் செய்யும் விதமாக மம்முட்டியின் நடிப்பும், அப்புன்னி சசி ஏற்று நடித்திருக்கும் குட்டப்பன் எனும் கதாபாத்திரத்தின் வடிவமைப்பும் இருக்கின்றன. ஒரு வகையில் பார்த்தால், அப்புன்னி சசியே இந்தப் படத்தின் நாயகன். அவருடைய வெகு இயல்பான நடிப்பும், இறுக்கமற்ற உடல்மொழியும், அன்பில் ததும்பும் விழிகளும், அசாத்தியமான வசன உச்சரிப்பும் முதல் காட்சியிலேயே அவரை நம் மனத்துக்கு நெருக்கமானவராக மாற்றிவிடுகின்றன. தொடர்ந்து அடக்குமுறைக்கு உள்ளாகும் மனிதர்களின் வலியையும், போராட்டக் குணத்தையும், வெற்றியை நோக்கிய அவர்களின் முனைப்பையும் அந்த அளவு தத்ரூபமாக அப்புன்னி சசி வெளிப்படுத்தி இருக்கிறார். திருமண பதிவின்போது பதிவாளரின் கன்னத்தில் அவர் அறையும் காட்சியும், எதிர்பாரா விதமாக லிப்டில் மம்முட்டியைச் சந்திக்கும்போது அவர் விரல்கள் போடும் தாளமும், பார்வதியின் உறவினர்களின் முன்னர் அவருடைய கையைப் பிடித்தபடி நடக்கும்போது அவர் வெளிப்படுத்தும் பெருமிதமும் மம்முட்டியைக் கூட பொறாமைக் கொள்ள வைக்கும்.

**மம்முட்டியின் கோரத்தாண்டவம்**

குட்டன் கதாப்பத்திரமாகவே மம்முட்டி இந்த திரைப்படத்தில் வாழ்ந்திருக்கிறார். நான் ஏன் ஒரு மாபெரும் நடிகராக இன்றும் கொண்டாடப்படுகிறேன் என்பதை உணர்த்தும் விதமாக ஒவ்வொரு காட்சியிலும் அவர் நடித்திருக்கிறார். ஒரே இடம், ஒரே சூழல் என்று அமைந்திருக்கும் காட்சியில் கூட நொடிக்கொரு முறை அவர் முகத்தில் வெளிப்படும் மாறுபட்ட உணர்வுகள் நம்மை மலைக்க வைக்கின்றன. சமூகத்தின் கோட்பாடுகளைக் கேள்விகளின்றி ஏற்றுக்கொள்ளும் மனிதர்களிடம் தென்படும் இயல்பான இறுக்கத்தை மம்முட்டி அப்படியே நம் கண்முன் நிறுத்தியிருக்கிறார். புறத்தோற்றத்தில் நல்லவர்களாக இருக்கும் மனிதர்களுக்குள் மறைந்திருக்கும் வன்மத்தையும் மூர்க்கத்தையும் சிறு, சிறு முக அசைவுகளைக் கொண்டு அவர் உணர்த்தும் விதம் அலாதியானது. மகனுடன் பல துலக்கும் காட்சியில் கூட அவருடைய முகம் பல்வேறு விதமான உணர்ச்சிகளை வெளிப்படுத்துகிறது.

பார்வதியைப் பார்க்கும்போது எல்லாம் அவர் வெளிப்படுத்தும் அசௌகரியங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ரகம். பார்வதி கர்ப்பமுற்று இருப்பதைக் கேள்விப்படும்போது அவர் வெளிப்படுத்தும் உணர்ச்சிகள், ஒருவேளை மம்முட்டியின் நிலைப்பாடு சரிதானோ என்கிற எண்ணத்தை நமக்கு ஏற்படுத்திவிடுகின்றன. இறுதியில் பார்வதியின் மனத்தை மாற்ற முயலும்போது, அவரின் அன்பு எனும் முகமூடி படிப்படியாகக் கழன்று மூர்க்கம் மிகுந்த வெறியாக நிலைபெறும் காட்சியில் மம்முட்டி ஆடியிருக்கும் கோரத்தாண்டவம் அவருக்கு மட்டுமே சாத்தியமான ஒன்று.

**கவனம் ஈர்க்கும் இயக்குநர்**

நல்ல கதையைத் தேர்ந்தெடுத்ததில் பளிச்சிடும் இயக்குநரின் திறமை, அதன் ஆக்க நேர்த்தியில் ஏமாற்றத்தை அளிக்கும் விதமாக அமைந்திருக்கிறது. இந்தத் திரைப்படத்துக்கு மம்முட்டி, அப்புன்னி சசி, பார்வதி ஆகிய மூன்று பேரின் கதாபாத்திரங்கள் மட்டும் போதுமானவை. அவற்றுக்குள் இருக்கும் முரண்களைப் பற்றிப் பேசி இருந்தாலே, அது நமக்கு ஒரு நிறைவான திரைப்பட அனுபவத்தை அளித்திருக்கும். ஆனால், ஒரே படத்தில் பல கனமான அரசியல் நிகழ்வுகளை இயக்குநர் பேச முயற்சித்து இருக்கிறார். இதன் விளைவாக, இந்தப் படம் பல்வேறு திசைகளில் அழுத்தமற்று பயணிக்கிறது. மம்முட்டியும், அப்புண்ணி சசியும் நமக்கு அளிக்கும் நிறைவை, இந்த அழுத்தமற்ற பயணம் நீர்த்துப்போகச் செய்துவிடுகிறது.

இருப்பினும் இந்தத் திரைப்படம், வெறுப்பு நிரம்பி வழியும் இன்றைய காலகட்டத்துக்குத் தேவையான ஒன்றாக, நாம் தவறாமல் பார்க்க வேண்டிய ஒன்றாக இருக்கிறது. அனுபவமின்மை காரணமாக ஆக்க நேர்த்தியில் தடுமாறும் ரதீனா, அந்தக் குறையைப் பலரும் பேசத் தயங்கும் கனமான களத்தைத் தேர்ந்தெடுத்தன் மூலம் ஈடு செய்து இருக்கிறார். சமகால சமூக - அரசியல் உளவியலும், அதன் ஆபத்துகளும் அத்தனை நேர்த்தியாக இந்தத் திரைப்படத்தில் பதிவு செய்யப்பட்டு இருக்கின்றன. தந்தை - மகன் உறவின் வழியாக இயக்குநர் உணர்த்தும் நுண் அரசியல், சாதிய மனோபாவத்தின் பேராபத்தை நமக்கு அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. முக்கியமாக இந்தத் திரைப்படம், சமூகத்தின் பார்வையில் தம்மை நல்லவர்களாகவும் வெற்றியாளராகவும் நம்பும் பலரது முகமூடியைக் கிழித்தெறிந்துள்ளது.

# துரித உணவுப் பழக்கத்திலிருந்து மீள்வோமா?

**சாந்தன்**

தெருவுக்குத் தெரு துரித உணவுக் கடைகள் முளைத்திருக்கின்றன. என்றோ ஒரு நாள் தானே என வாங்கத் தொடங்கிய பழக்கம் வாரத்துக்கு இரண்டு மூன்று நாட்கள் என நீண்டு பின் கணக்கு வழக்கின்றி வாங்கிக் கொண்டிருக்கிறோம்.

மாதம் ஒருநாள் குடும்பத்துடன் உணவகத்திற்கு சென்று சாப்பிடுவது என்று ஆரம்பித்தார்கள். இன்று அது கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து வாரம் ஒருநாள் என அதிகரித்து பின் இரண்டு மூன்று நாட்களுக்கு ஒரு முறை வெளி உணவு என்னும் நிலை உருவாகி விட்டது. வெளியே செல்ல முடியாத நிலையில் கைப்பேசி வழியே பேசி உணவுகளை வீட்டிற்கே வரவழைக்கும் நிலைக்கு வந்துவிட்டோம்.

இப்படி வெளியிலிருந்து தருவிக்கும் உணவுகளில் பெருவாரியான மக்களை கவர்ந்து இழுப்பது துரித உணவுகளே. இன்று மூலை முடுக்கெங்கும் நீக்கமற நிறைந்திருப்பது இந்த துரித உணவகங்கள். உணவு பற்றிய புரிதல் ஏதுமின்றி வியாபாரத்தை மட்டுமே முன்னிறுத்தி நடத்தப்படுகின்றன. இந்த உணவுப் பொருளுக்கு இவ்வளவுதான் நிறமிகள் சேர்க்க வேண்டும் என்ற அளவு இருக்கிறது. ஆனால் அதைப் பற்றிய எந்தப் புரிதலும் இன்றி வரைமுறைகளைக் கடந்து நிறமிகளை சேர்க்கிறார்கள்.

சுவைக்காக அவர்கள் சேர்க்கும் ரசாயனங்கள் பிள்ளைகளின் கண்களைக் கவர்கின்றன. அவை அப்படியே வயிற்றையும் பதம் பார்க்கிறது. இப்படி சேர்க்கப்படும் செயற்கை நிறமிகள் உடல் நலத்துக்கு தீங்கு விளைவிக்கும் என மருத்துவர்கள் எச்சரிக்கிறார்கள். இருப்பினும் வாடிக்கையாளர்கள் வண்ணமயமான உணவைத்தான் அதிகம் விரும்பி வாங்குகிறார்கள் என அவற்றைத் தயாரிப்பவர்கள் சொல்கிறார்கள்.



வசதி படைத்தவர்கள் தரமான உணவகங்களை தேடிச்சென்று உண்கிறார்கள். ஆனால் வசதியற்றவர்கள் சாதாரண கடைகளை நம்பி இருக்க வேண்டிய துர்பாக்கிய நிலைமை. வேலைக்குச் செல்லும் இளைஞர்கள் இதுபோன்ற கடைகளை நம்பி நுழைந்து இன்று பல்வேறு நோய்களை வரவழைத்துக் கொண்டிருக்கிறார்கள். நல்ல உடல் நலமே சிறந்த மனபலத்தை கொடுக்கும். இள வயதில் உடல்நலம் பாதிக்கப்பட்டால் வாழ்வு நரகமாகிவிடும். பட்டு திருந்துவதைவிட வரும் முன்பே எச்சரிக்கையாக இருத்தல் நலம்.

இளைஞர்களின் வாழ்க்கை முறையிலிருந்து துரித உணவைப் பிரிக்க வேண்டும். கொரோனா ஊரடங்கு காலத்தில் அனைவரும் தங்கள் வீட்டில் தயாரித்த உணவு வகைகளையே சாப்பிட்டு வந்ததால் மருத்துவமனைக்கு செல்ல வேண்டிய தேவையே ஏற்படவில்லை என்பதை நினைவில் கொள்ளவேண்டும். அந்த சில மாதங்களுக்கு அஜீரணம், பித்தம், வாந்தி, தலைவலி, வயிற்று வலி போன்ற தொல்லைகளிலிருந்து நமக்கு விடுதலை கிடைத்தது.

இன்று வாழ்க்கைச் சக்கரம் பழையபடி உருளத் தொடங்கியதால் பழைய வேகம் துளிர் விடத் தொடங்கி விட்டது. உணவு நேரத்தைத் தாண்டி நடுநிசி நேரங்களில் உண்ணப்படும் துரித உணவுகளால் நம் கணையம் கதறுகிறது. இது போன்ற உணவுகளைத் தொடர்ந்து எடுத்துக்கொண்டால், பெண்களின் தாய்மை தடுக்கப்படுவதோடு ஆண்களின் ஆண்மை அழியக்கூடிய அபாயமும் இருக்கிறது. மரபு மாறிய உணவு முறையால்தான் பல பெண்களின் கருத்தரிப்பு இன்று கேள்விக் குறியாகி இருக்கிறது.

காய்கறி, கீரைகளைக் கூட ரசாயனம் கலந்த நீரில் முக்கி எடுத்து விற்பனைக்கு வைக்கிறார்கள் என்பதை அறியும்போது எதைத்தான் நம்பி சாப்பிடுவது என்ற அச்சம் ஏற்படுகிறது. சமீபத்தில் கேரளத்தில் ஓர் இளம்பெண் துரித உணவு மோகத்தால் தன் இன்னுயிரை இழந்தார். கெட்டுப்போன சைவ உணவுகளை விட கெட்டுப்போன அசைவ உணவுகள் நம் உயிரைப் பறிக்கும் அபாயம் மிக்கவை.

சென்ற மாதம் இரண்டு நாட்கள் வெளியூர் பயணம் மேற்கொள்ள வேண்டியிருந்தது. ரயிலில் சாப்பாடு சரிவர இருக்காது என இரண்டு வேளைக்கு கட்டுச்சோறு எடுத்துக்கொண்டோம். உறவினர் இருவரிடமிருந்து இருவேளை உணவுகள் அந்தந்த ஊர் நிறுத்தங்களில் ரயிலிலேயே கிடைக்கப் பெற்றோம். இந்த சுட்டெரிக்கும் கோடையில் கையோடு கொண்டு போயிருந்த எலுமிச்சம்பழத்தை சாறாக்கி உப்புப் போட்டு நீர் கலந்து குடித்தோம். அந்த இரண்டு நாள் பயணத்திலும் உடல்நலம் மிகச் சிறப்பாக இருந்தது. வீட்டு சாப்பாடு எடுத்துக்கொண்டதால் பயணக் களைப்பு ஏதுமின்றி மனம் குதூகலித்தது.

ஆனால் எங்களுடன் பயணித்த பலர் உணவுக்காக பெரிதும் திண்டாடினார்கள். கிடைத்த உணவை வாங்கி உண்டு பெரும் சிரமத்துக்கு ஆளானார்கள். சிலருக்கு வாந்தி, வயிற்றுவலி என வேதனைகளும் வந்து சேர்ந்ததால் வழியெங்கும் புலம்பிக் கொண்டே வந்தார்கள்.

முன்பெல்லாம் பயணம் என்றாலே உணவு பற்றிய திட்டமிடுதல் இருக்கும். ஆனால் இப்போதெல்லாம் உணவகங்கள் பெருகிப் போனதால் ஆங்காங்கே கிடைத்ததை சாப்பிட்டு கொள்ளலாம் என்ற எண்ணம் உள்ளது. சிலர், வீட்டிலிருந்து கிளம்பும் போது தண்ணீர் கூட எடுத்துச் செல்வதில்லை. வழியில் காசுகொடுத்து ஒரு லிட்டர் தண்ணீர் போத்தலை வாங்குகின்றனர்.

சிலருக்கு உணவை எடுத்துச் செல்ல சோம்பேறித்தனம். இந்த மனோபாவம்தான் வாழ்க்கை முறையையே மாற்றி அமைக்கிறது. இளவயது மாரடைப்புகளுக்குக் காரணம் பெரும்பாலும் துரித உணவு பழக்கமே. நம்முடைய உடல் நலன் குறித்து கவலைப்படாமல், நாம் வேறு எது குறித்து கவலைப்படப் போகிறோம்? சுவர் இருந்தால்தானே சித்திரம் வரைய முடியும்?

வாழை இலையில் வைத்து சாப்பிட நேரமில்லை, இடவசதியும் இல்லை என்பதால் கைக்கு அடக்கமாய் மடித்து காகிதத்தில் சுற்றிக் கொடுக்கப்படும் உணவை அப்படியே வாங்கி உண்கிறார்கள். வெளியே கிளம்புவதற்கு அரை மணி நேரம் முன்னதாக சற்று மெனக்கெட்டால் நமக்கான உணவை நாமே தயார் செய்து கொள்ளலாம்.

அண்மையில், நண்பர் ஒருவர் "எங்களுக்கு உணவு தயாரிப்பதையே என் மனைவி புலம்பிக் கொண்டேதான் செய்வாள். அதனால் என் நண்பர்களையோ உறவினர்களையோ என் வீட்டுக்கு நான் அழைப்பது இல்லை" என்று மனம் கனத்துப் போய் சொன்னார். வீட்டில் உள்ளவர்களுக்கு சமைப்பதையே பெரிய தொந்தரவாக நினைக்கும் பெண்கள், விருந்தினர்கள் வந்தால் அவர்களை எப்படி கவனிப்பார்கள்? வழிப்போக்கர் அமர்ந்து இளைப்பாறிச் செல்ல வாசலில் திண்ணை வைத்து வீடு கட்டிய மரபு நம்முடையது. காலத்திற்கேற்ப மாற்றங்கள் ஏற்படுவது இயல்புதான். ஆனால் அடிப்படையே ஆட்டம் காணும்போது நிச்சயம் அதில் கவனம் செலுத்த வேண்டும்.

விருந்தினர் வருகையைக் கொண்டாடிய நம் தமிழ் மரபு தற்போது அவர்களின் வருகையை தொல்லையாக எண்ணுகிறது. தற்போது விருந்தினர்களையும் உணவகங்களில் வரவேற்று துரித உணவுகளை உண்ணச் செய்து வழியனுப்பும் கலாசாரம் உருவாகி விட்டது. இதனால் பணம் செலவானாலும் பரவாயில்லை. உடல் அலட்டிக்கொள்ளாமல் இருக்கவேண்டும் என பெரும்பாலோர் நினைக்கின்றனர்.

விருந்தோம்பல் நமது பண்பாட்டின் உச்சமாகும். ஆனால் அடுத்த தலைமுறையினருக்கு யாரெல்லாம் நம் உறவினர் என்பதுகூட தெரியாது. பெரும்பாலோர் ஒற்றைப் பிள்ளையாக வளர்வதால் அவர்களிடம் விட்டுக் கொடுத்தல் என்னும் பண்பே இருப்பதில்லை. சில வீடுகளில் உறவினர்கள் வரவே கூடாது எனும் அடக்குமுறை நிலவுகிறது.

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து என்கிறார் வள்ளுவர். அத்துடன் விருந்தினர்களை மனதார வரவேற்று உபசரிப்பது பெரும் பாக்கியம் என்றும் கூறுகிறார்.

நாம் எந்த மனநிலையில் சமைக்கிறோம் என்பதும் முக்கியம் என்கிறார்கள் உளவியல் அறிஞர்கள். அதை விளக்கும் ஒரு குறுங்கதை. மன்னர் ஒருவரிடம் பணியாற்றி வந்த சமையல்காரர் பணி ஓய்வு பெற்றுவிட, மன்னருக்கு சமைத்துப் போட புது சமையல்காரர் நியமிக்கப்பட்டார். அவர் சமைத்த உணவின் மணமும் சுவையும் அலாதியாக இருந்தது. இரண்டு வாரங்கள் சென்றபின், மன்னருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டது .

ஏன் மன்னருக்கு திடீரென உடல் நலக் குறைவு என்று ஆராய தொடங்கினார் அமைச்சர். தரமான உணவு பொருள், சுத்தமான முறையில் தயார் செய்யப்பட்டு மன்னருக்குத் தரப்படுகிறது. இருப்பினும் ஏன் இந்த நிலை என விசாரித்ததில் புதிதாக நியமிக்கப்பட்ட சமையல்காரர், "இந்த மன்னனுக்கு என்ன இவ்வளவு வகைகள் சமைக்க வேண்டியிருக்கிறதே' என நொந்து கொண்டே சமையல் செய்தாராம். அந்த எண்ணத்தின் பிரதிபலிப்பால்தான் மன்னனுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டிருக்கிறது என்ற உண்மை விளங்கியதாம்.

வீட்டில் சமைப்போர் அதனை ஒரு சுமையாகக் கருதுவதால்தான் இப்படி ஓர் எண்ணம் மனதில் எழுகிறது. நம் குடும்பத்தினருக்கான அமிருதத்தை நாம் தயாரிக்கிறோம் என்ற உணர்வு ஏற்பட்டால் மனம் குதூகலிக்கும். என்றோ ஒருநாள் சலிப்பு வந்தால் தவறில்லை. நாள்தோறும் சலித்துக்கொண்டும் வெறுத்துக் கொண்டும் உணவை தயார் செய்தால் நம் உணவே நமக்கு நஞ்சாக மாறிவிடும். நமக்குப் பிடித்தவர்களுக்கு அமிருதத்தைப் பரிமாறப் போகிறோமா? நஞ்சைப் பரிமாறப் போகிறோமா? முடிவு நம் கைகளில்.



# எமனிடமிருந்து மகனை மீட்ட தாய்!

பா.ஆனந்த்

இயமனிடம் இருந்து தனது கணவனான சத்தியவானின் உயிரை மீட்டுவந்தாள் சாவித்திரி என்ற புராணக் கதையைக் கேட்டிருக்கின்றோம். ஆனால் தூக்குக் கயிற்றில் தொங்க இருந்த தனது மகனின் உயிரைக் காத்து இன்று சிறைமீட்டும் வந்திருக்கிறார் அற்புதம்மாள். இது புராணக் கதையல்ல. உண்மைக் கதை.

"ராஜீவ் காந்தி கொலைக்கும், என் மகனுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை" இந்த ஒற்றைப் புள்ளியில் தான் அற்புதம் அம்மாள் தனது சட்டப் போராட்டத்தைத் தொடங்கினார். அதிலிருந்து 31 ஆண்டு காலம் கழித்து அவருக்கு வெற்றி கிடைத்துள்ளது. உடலில் பலமும், தோற்றத்தில் இளமையும் இருந்த காலத்தில் போராட்டத்தைத் தொடங்கியவர் முதுமையின் பிடிக்கு வந்த வேளையில் வெற்றி பெற்றிருக்கிறார்.

31 ஆண்டு காலம் ஒரு மனிதரின் வாழ்க்கையில் எவ்வளவு முக்கியமானது என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை. மனித வாழ்வில் அது ஒரு பெரும்பகுதி. பேரறிவாளனுக்கும்தான். அப்படியான, வாழ்க்கையின் பெரும் பகுதியை சிறைச்சாலையில், எண்ண அலைகள் அனைத்தையும் வழக்கின் வசமே வைத்துவிட்டு இன்று வருமா, நாளை வருமா என 31 ஆண்டுகள் காத்திருப்பு பேரறிவாளனுக்கு விடியலைத் தந்துள்ளது. அந்த விடியலுக்கு வித்திட்டவர்தான் அற்புதம் அம்மாள். அவர்தான் முழுமுதற்க் காரணமும்கூட. அப்படித்தானே பேரறிவாளனும் சொல்கிறார்.

அன்பு, அறிவு, அருள் என மூன்று குழந்தைகள் மற்றும் கணவர் குயில் தாசனுடன் வெகு இயல்பான வாழ்க்கையைத்தான் அற்புதம்மாள் வாழ்ந்து கொண்டிருந்தார். இந்திய முன்னாள் தலைமை அமைச்சர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பேரறிவாளனை விசாரணைக்கு அழைத்துச் செல்வதாக சிபிஐ சொல்லும்வரை அவர் சாதாரண குடும்பப் பெண்ணாகத்தான் இருந்தார். ஆனால், "செய்யாத தவறுக்கு என் மகன் சிறைத் தண்டனை அனுபவிக்கக் கூடாது" என்ற வாதத்துடனான வேகம் அவரை சட்டப் போராட்டத்தை மேற்கொள்ள வைத்தது.

தொடக்க நாட்களில் பேரறிவாளனைப் பார்க்கவே நாள் கணக்கில் காத்திருந்து, ஜோலார்பேட்டைக்கும், சிபிஐ அலுவலகத்துக்கும், சிறைச்சாலைக்கும் அலைந்து வந்த வர் இன்று உச்ச நீதிமன்றம் வரை சென்று மகனை மீண்டும் பெற்றெடுத்துள்ளார். 1991 ஜூன் மாதம் தொடங்கிய அவரது போராட்டம் 2022ஆம் ஆண்டு மே மாதம் நிறைவுபெற்றுள்ளது.

எத்தனை துணிச்சல், எத்தனை வைராக்கியம் அந்த மனதில் இருந்திருக்க வேண்டும் என்று எண்ணிப் பார்க்கும்போது பிரமிப்பாக இருக்கிறது. மகனைப் பற்றி காதுபட கேலி பேசியவர்களுக்கு மத்தியில் மகனுக்காக அறப்போராட்டங்களை முன்னெடுத்தார். பட்டினிப்போராட்டம், பேரணி, பரப்புரைக் கூட்டங்கள் என்று முன்னெடுத்தார். அவருக்காக சில அமைப்புகள் இன்றுவரை பக்கபலமாக இருப்பதை மறுப்பதற்கு இல்லை. ஆட்சிகள் மாறினாலும் அவருடைய கோரிக்கை மகன் விடுதலையைப் பற்றி மட்டுமே இருந்தது.

இந்த நிலையில்தான் கடந்த 2014ஆம் ஆண்டு பேரறிவாளன் மற்றும் மற்ற 3 பேர் அனுப்பிய கருணை மனு மீது எந்த முடிவு எடுக்காமல் இந்தியக் குடியரசுத் தலைவர் தாமதப்படுத்தியதைச் சுட்டிக்காட்டிய உச்ச நீதிமன்றம், பேரறிவாளன் உள்ளிட்டோருக்கு விதிக்கப்பட்ட சாவுத் தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்தது. "பிழைத்தான் மகன்" என்ற பெருமகிழ்ச்சியோடு போராட்டத்தை புதிய உத்வேகத்துடன் முன்னெடுத்தார்.

அவரது அறப்போராட்டத்துக்குக் கிடைத்த இமாலய வெற்றிதான் விசாரணை அதிகாரி தியாகராஜனின் வாக்குமூலம். 2017இல் அவர் ஓர் அறிவிப்பை வெளியிட்டார். "பேரறிவாளனிடம் நான் நடத்திய விசாரணையின்போது அவர் எனக்கு ஒன்றுமே தெரியாது. பற்றரியை வாங்கிக்கொடுத்தபோதும் அதனை எதற்கு வாங்குகின்றோம் என்று எனக்குத் தெரியாது - என்று சொன்னதை நான் அவரது வாக்குமூலத்தில் பதிவு செய்யத் தவறிவிட்டேன்" என்றார்.

எறும்பு ஊற பாறை கரையுமோ என்று நினைப்பவர்களுக்கு அது பொய் என அற்புதம் அம்மாள் நிரூபித்த தருணம்தான் அதிகாரி தியாகராஜனின் அந்த அறிவிப்பு. அவருடைய அந்த அறிவிப்பு வழக்கிற்கு பேருதவியாக அமைந்தது.

அதன் பின்னர்தான் இன்னும் உத்வேகத்துடன் அற்புதம்மாள் சுழன்றடிக்கத் தொடங்கினார். 2017 ஆவணி மாதம் முதன்முறையாக பேரறிவாளனை பரோலில் சிறையை விட்டு வெளியே எடுத்தார் அற்புதம் அம்மாள். அப்போதும் அவரது எண்ணம் விடுதலையை நோக்கியே இருந்தது. அதன் பின்னர் பலமுறை பரோல் நீட்டிக்கப்பட்டது. அற்புதம் அம்மாளின் அலைச்சல்கள் குறைந்தது. ஆனால், அவரது போராட்டம் சுணக்கம் காணவே இல்லை. அற்புதம்மாள் சட்டப்போராட்டத்தில் உச்ச நீதிமன்றத்தில் மட்டுமே அவர் 12 ஆண்டுகள் போராடியிருக்கிறார்.

ஒருவழியாக கடந்த பங்குனி மாதம் பேரறிவாளனுக்கு பிணை வழங்கப்பட்டது. அப்போது அவர் சொன்னது: "இந்த பிணை ஒரு இடைக்கால நிவாரணம் மட்டுமே. என் மகன் பேரறிவாளன் உள்பட அனைவரும் முழுமையான விடுதலையை பெறுகின்றவரை, எங்கள் சட்டப்போராட்டம் தொடரும்." வைகாசி 18, 2022 வரலாற்றில் ஒரு முக்கியப் பக்கத்தை அற்புதம் அம்மாள் எழுதியிருக்கிறார். மகனின் விடுதலை அவரின் வெற்றியாக அமைந்திருக்கிறது.

"தாயால் விடுதலையானேன்" என்று நெகிழும் பேரறிவாளன், தன் தாயை மாக்சிம் கார்கியின் 'தாய்' புதினத்தில் வரும் தாய்க்கு இணையாக ஒப்பிட்டுப் பேசுகிறார். "இத்தனை ஆண்டு போராட்டத்தில், அம்மாவின் தனிப்பட்ட வாழ்வை நான் திருடிவிட்டேனோ என வருந்துகிறேன்" எனக் கூறுகிறார்.

ஆனால், அற்புதம் அம்மாள் அப்படி நினைக்கவில்லை. இத்தனைப் போராட்டங்களை அவர் முன்னெடுத்திருந்தாலும் பேட்டியில் அவர், "31 ஆண்டு கால வலியையும் வேதனையையும் என் மகன் கடந்து வந்துவிட்டார்" என்றாரே தவிர, "நான் வெற்றி பெற்றுவிட்டேன்" என்று சொல்லவில்லை. அதனால்தான் அவர் ஓர் அற்புதமான அம்மா!

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.05.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781